விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii


சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 22 வெள்ளிக்கிழமை (06.07.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 200

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## கால்கள் கிழிந்த நிலையில் நிமலரூபன் துடிதுடித்து சாவு

### அரசியல் கைதிகளை கொடூரமாக தாக்கினர்



(அநுராதபுரம்)

வவுனியா சிறைக்குள் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ் அரசியல் கைதிகள் பலர் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை வவுனியா சிறைக்குள் புகுந்த 15 முதல் 23 வரையிலான அரசாங்க பாதுகாப்பு அதிகாரிகள் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்ட பின்னர் மயக்கமடைந்த நிலையில் இருந்த சிறைக் கைதிகளை கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

அங்கிருந்து வாகனங்களில் தூக்கிப் போடப்பட்ட கைதிகள் பிற்பகல் ஒரு மணியளவில் அநுராதபுரத்திற்கு கொண்டு சென்று சேர்க்கப்பட்டு இரவு 11 மணிவரை இடைவிடாது தாக்கப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.


மேலும் அங்கிருந்த சிறைக்காவலர்களும் காவல்துறையினரும் சிறைச்சாலை அத்தியட்சகரின் கால்சப்பாத்தை நக்குமாறு தொடர்ச்சியாகத் தாக்கியுள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

## நிமலரூபனின் சடலம் இழுபறி நிலையில்!

கடந்த மாதம் 29ஆம் திகதி வவுனியா சிறைச்சாலையில் ஏற்பட்ட அசாதாரண நிலைமையினைத் தொடர்ந்து சிறை அதிகாரிகள் மற்றும் அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டு கடும் காயங்களுக்குள்ளான நிலையில் வவுனியா சிறைச்சாலையிலிருந்து மஹர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு பின்னர் றாகம போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசென்று உயிரிழந்த நிமலரூபனின் சடலம் தற்போது பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் தனது மகனின் சடலத்தைப் பொறுப்பேற்றுக் கொள்வதற்காக றாகம வைத்தியசாலைக்கு சென்றுள்ள நிமலரூபனின் பெற்றோர் பொலிஸாரின் கட்டுப்பாட்டிலேயே வைக்கப் (20ஆம் பக்கம் பார்க்க)

## சரணடைந்த புலிகளை ஏன் கொல்லவில்லை; அதனாலேயே இந்நிலை என்றாராம் கோத்தா!



(கொழும்பு), வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது சரணடைந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களை கொலை செய்துவிடுமாறு விடுக்கப்பட்ட உத்தரவைப் பின்பற்றியிருந்தால், வவுனியா சிறையில் காவலர்கள் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றிருக்காது என மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வாவிடம் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்ததாக லங்கா நியூஸ் வெப் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது

வவுனியாவில் சிறைக் காவலர்கள் மூவரைப் பிடித்துவைத்து தமிழ் அரசியல் கைதிகள் போராட்டம் நடத்தியிருந்தனர். இத்தகைய சம்பவங்கள் விடுதலைப்புலிகள் இயக்கம் தொடர்ந்தும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்ற உணர்வை அவ்வியக்கத்தின் சர்வதேச செயற்பாட்டாளர்களுக்கு ஏற்படுத்தும் எனவும் அவர் (19ஆம் பக்கம் பார்க்க)

## என் ஆட்சியை அசைக்க எவராலும் முடியாது! — ஜனாதிபதி



நான் எவரையும் நம்பியும் ஆட்சி நடத்தவில்லை. விருப்பமானவர்கள் இருக்கலாம், விருப்பமில்லாதவர்கள் வெளியேறிச் செல்லலாம். அதற்கான வாசல் கதவுகள் திறந்தே இருக்கின்றன. ஆனால் ஆட்சியை எவரும் நினைத்தபடி அசைக்க முடியாது. இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிகவும் காட்டமுடன் தெரிவித்துள்ளார்.

ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகங்களின் பொறுப்பு அரசை பாதுகாப்பதல்ல; வழிநடத்துவதே!

### ஜேர்மன் தூதுவர் விளக்கம்

அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டியது ஊடகங்களின் பொறுப்பாக கருதப்பட முடியாது என இலங்கைக்கான ஜேர்மனிய தூதுவர் ஜென்ஸ் பொலன்டர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தேசிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஊடகங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும், விமர்சனங்களைத் தவிர்க்க வேண்டும் எனவும் அண்மையில் ஊடக அமைச்சின் செயலாளர் ஆங்கில ஊடகமொன்றில் கோரியிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், ஏனெனில் ஊடகங்கள் அரசாங்கத்தை சரியான பாதையில் இட்டுச் செல்லும் கடமையை முதன்மையாக மேற்கொள்ள வேண்டுமென்பதே தமது நிலைப்பாடு எனவும் பொலட்னர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் குறைக்கப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளமை (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர் படகு மீட்பு

இலங்கையர்களும் இருக்கலாம் என்று நம்பப்படும் அனர்த்தத்துக்குள்ளான படகு ஒன்றில் இருந்து 162 பேரை அவுஸ்ரேலிய கடற்படையினர் மீட்டுள்ளனர். இந்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது. இந்தோனேசிய கடற்பரப்பில் வைத்து மீட்கப்பட்ட இந்தப் படகில் மொத்தமாக படகு ஓட்டுநர்கள் உட்பட 164 பேர் இருந்துள்ளனர்.

இந்த நிலையில் படகில் இருந்தோர் கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்படுவதாக அவுஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. படகில் இருந்து அகதிகள் மீட்கப்பட்ட போது அதில் (19ஆம் பக்கம் பார்க்க)

## ஆணைக்குழுவின் பரிந்துரைகளை விரைவில் அமுல்படுத்த வேண்டும்

### தொழில்சார் நிறுவன பேரவை வலியுறுத்து

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட வேண்டும் என சிவில் அமைப்பான தொழில்சார் நிறுவனப் பேரவை வலியுறுத்தியுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் சில முக்கியமான பரிந்துரைகள் தாமதமின்றி அமுல்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளது.

இன நல்லிணக்கம் மற்றும் நல்லாட்சி ஆகியவற்றை மேம்படுத்தக் கூடிய பல முக்கியமான பரிந்துரைகளை உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு முன்வைத்துள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கம் அர்ப்பணிப்பையும், வலுவான முனைப்பையும் வெளிப்படுத்த வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறிந்து (19ஆம் பக்கம் பார்க்க)

## 15 ஆபிரிக்க நாடுகளுடன் இலங்கை உறவுக்கு தயார்

இலங்கை அரசாங்கம் 15 ஆபிரிக்க நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளத் தீர்மானித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் ஆலோசனைக்கு அமைய 15 ஆபிரிக்க நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மரியுடானியா, மலாவி, புர்கினா, பாசோ, சாட், டிஜிபவுட்டி, மத்திய ஆபிரிக்க குடியரசு, கபோனோஸ் குடியரசு, கமருன், இக்வடோரியல் கயானா, காம்பியா, கேப்வெர்டா, சியரேலியோன், டோகோ, நைஜர் (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சுவீடன் அமைச்சரை அழகப்பெரும சந்திப்பு

(ஸ்றொக்கோம்)

சுவீடன் நாட்டுக்குரிய புதிய இலங்கைத் தூதுவர் டளஸ் அழகப்பெரும சுவீடனின் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து இராஜதந்திர ரீதியில் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

சுவீடன் வெளிவிவகார அமைச்சில் இந்தப் பேச்சுவார்த்தைகள் நட்புறவு ரீதியில் நடைபெற்றன. இச் சந்திப்பின் போது சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கால் பில்டிட் இலங்கையுடனான இவ் உறவுகள் பலம் அடையும் என குறிப்பிட்டதாக இலங்கை தூதுவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமைத்துவத்தில் இலங்கையில் பாரிய உட்கட்டமைப்பு வசதிகள், இனங்களுக்கிடையிலான நட்புறவு போன்றவை தொடர்பாக இலங்கை அரசு கவனம் செலுத்துவதாகவும் இலங்கைத்தூதுவர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். (ந-8,11)

# முள்ளியவளையில் குடியேற்றப்பட்டவர்களுக்கு

# 'இல்லை' என்பது தான் இதுவரை 'இருக்கு'

## 2 வருடமாகியும் அடிப்படை வசதிகள் எதுவுமில்லை

(புதுக்குடியிருப்பு)

முள்ளியவளை ஐயனார் குடியிருப்பைச் சேர்ந்த 10ற்கும் அதிகமான குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு முள்ளியவளை ஐயனார் குடியிருப்பு பகுதியில் இரண்டு வருடங்களுக்கு முன் குடியமர்த்தப்பட்ட இந்தக் குடும்பங்களுக்கு இதுவரை நிரந்தரவீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவில்லை.

அத்தோடு மலசல கூட வசதிகள், குடிநீர் வசதி, சுகாதார வசதிகள் போன்ற அடிப்படைத் தேவைகள் கூட இன்னும் பூர்த்தி செய்து கொடுக்கப்படவில்லை.

காட்டுப் பகுதிக்குள் குடியமர்த்தப்பட்ட இந்தக் குடும்பங்கள் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையில் பல இன்னல்களை அனுபவித்த வண்ணம் நாளாந்தம் தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

நிரந்தர வீடுகள் இன்றி தகரக் கொட்டகைகளுக்குள் விஷ ஜந்துக்களின் அச்சத்துடன் மின்சாரம், சுகாதார வசதிகள் இல்லாத நிலையில் வாழ்ந்து வருவது தொடர்பில் அதிகாரிகளிடம் பலமுறை முறையிட்டும் இது வரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை என அப்பகுதி மக்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (ந-6,25)

## நாடாளுமன்றில் வரவு குறைவு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களின் வரவு குறைவடைந்து செல்வதாக எதிர் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி உறுப்பினர்களைப்போன்றே எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பது குறைவடைந்து வருகின்றது.

நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்ய கட்சி பேதமின்றி அனைவருக்கும் உரிமை இருக்கின்றது. நாடாளுமன்றை பிரதிநிதித்துவம் செய்யும் சகல உறுப்பினர்களும் பொதுமக்கள் பணத்தில் ஊதியம் பெறுகின்றனர். எனவே பொறுப்புணர்ச்சியுடன் அமர்வுகளில் பங்கேற்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

குறைந்த பட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருதடவையேனும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வருகை தொடர்பில் கவனம் செலுத்தப்படவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ந-8,11)

## நோயாளர்களின் பாதிப்பை கருதி

# வைத்தியர்களின் போராட்டத்திற்கு யாழ்.நீதிமன்று தடை உத்தரவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் இன்று நடைபெறவிருந்த வைத்தியர்களின் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை தடை செய்யுமாறு யாழ்.நீதிமன்று யாழ்.பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்துள்ளது.

இன்று நடைபெறவிருந்த இந்த தொழிற்சங்க நடவடிக்கையையும் ஆர்ப்பாட்டத்தினையும் சட்டவிரோதமானவை எனவும் அதனை இடைநிறுத்தக்கோரியும் யாழ்.பொலிஸ்நிலைய பொலிஸ்பரிசோதகர் சமன் சிகேரா நீதிமன்றிற்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தார்.

இவ் அறிக்கையினை பரிசீலித்த யாழ்.நீதவான் மா.கணேசராசா வைத்தியர்களின் ஆர்ப்பாட்டத்தினால் நோயாளர்கள், விபத்துக்களினால் பாதிக்கப்பட்டோர், விடுதிகளில் தங்கியிருக்கும் நோயாளிகள் அனைவரும் இப் ஆர்ப்பாட்டத்தினால் பாதிப்படையக் கூடும் என்பதினால் இவ் ஆர்ப்பாட்டத்தினை பொலிஸார் தடுத்து நிறுத்துமாறு உத்தரவிட்டுள்ளார்.

யாழ்.பொலிஸ் நிலைய பரிசோதகரினால் குறிப்பிடப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்தில் நாம் ஈடுபட திட்டமிடவில்லை எனவும் பணிப்புறக்கணிப்பிலேயே நாம் ஈடுபடுவதற்கு திட்டமிட்டிருந்ததாகவும் யாழ்.மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

குறித்த பணிப்புறக்கணிப்பானது யாழ்.மருத்துவ சங்கத்தினால் திட்டமிட்டிருந்த நிலையில் இதற்கு வடமாகாண அனைத்து வைத்தியர்களும், மட்டக்களப்பு வைத்தியர்களும் ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை யாழ்.போதனா வைத்திய சாலையின் நோயாளர்களின் உரிமையை பாதுகாக்குமாறு கோரி நேற்று வியாழக் கிழமை நடத்தப்பட்ட உண்ணாவிரதத்தை முடிவுக்கு கொண்டுவந்துள்ளதாக நோயாளர் உரிமைக்கான மக்கள் இயக்க உப தலைவர் க.கந்தவேள் தெரிவித்தார்.

யாழ்.மருத்துவ சங்கத்தினால் இன்று நடத்தப்பட்டிருந்த பணிப் பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு யாழ்.நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் நோயாளர்களின் நலன்கள் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் தாங்கள் இந்த உணவுத்தவிர்ப்புப் போராட்டத்தைமுடிக்குகொண்டு வந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-4,8)

# கல்வியை இராணுவ மயமாக்க அரசாங்கம் பெரும் முயற்சி!

## குற்றச்சாட்டுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

பாடசாலை அதிபர்களுக்கு இராணுவத் தராதர பயிற்சியளிக்கப்படுவதன் மூலம் பாடசாலைகளை இராணுவமயப்படுத்த அரசாங்கம் முனைவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்று வியாழக்கிழமை குற்றஞ்சாட்டியுள்ளது.

கல்வியில் காணப்படும் பாரிய தவறுகள் தொடர்பான மக்களின் ஆர்ப்பாட்டங்களை அதிபர்களுக்கான இராணுவப்பயிற்சியின் மூலம் அடக்குவதற்கு அரசாங்கம் முனைவதாக ஐக்கியதேசியக்கட்சியின் குருநாகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அகில வீராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் கல்வித்திட்டத்தில் காணப்படும் பாரிய தவறுகளை சுட்டிக்காட்டி வீதியில் இறங்கி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுவதை நிறுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிகளை பயன்படுத்துகின்றது எனவும் அவர் கூறினார்.

பல்கலைக்கழகங்களில் கல்வி சீர்குலைக்கப்பட்டதைப்போன்று பாடசாலைகளிலும் கல்வி சீர்குலைக்கப்படுகின்றது எனவும் அவர் கூறினார்.

இச்சிறார்களின் எதிர் காலத்தை சீர்குலைக்க வேண்டாமென நாங்கள் அரசாங்கத்தை கேட்கின்றோம். இலவச கல்வித்திட்டத்திலும் பரீட்சையிலும் ஏற்கெனவே இருந்த பெறுமதியும் ஆழமும் சீர் குலைக்கப்பட்டுவிட்டது எனவும் அவர் கூறினார்.

ஜனநாயகத்தை அழித்துக்கொண்டிருக்கின்ற அரசாங்கம் இராணுவமயப்படுத்தவும் முனைகின்றதெனவும் நாடாளுமன்ற உறுப்பினர் அகில வீராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார். (ந-6,11)

## பகுதிநேர கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பகுதிநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர்களுக்கான விரிவுரை தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறமாட்டதெனவும் விரிவுரைகள் ஆரம்பமாவது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் எனவும் யாழ்.பல் கலைக்கழக கல்வியியற்றுறைத் தலைவர் கலாநிதி திருமதி அ.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இதேவேளை முதுகல்விமாணி விரிவுரைகள் மறுஅறிவித்தல் வரை நடைபெறமாட்டாது என பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ச.சத்தியசீலன் அறிவித்திருந்தமை தெரிந்ததே. (ந-6)

## யாழ்.கோட்டக்கல்வி அதிகாரியாக சண்முககுமார் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கோட்டக்கல்வி அதிகாரியாக கோண்டாவில் இந்து மகாவித்தியாலய அதிபர் எஸ்.சண்முககுமார்வடக்குமாகாணகல்விஅமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இன்று பதவியேற்கும் சண்முககுமார் சிறந்த அதிபருக்கான ஜனாதிபதி விருதினை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக் கோட்டக்கல்வி அதிகாரியாக இருந்த திருமதி சிவபாலன் ஓய்வு பெற்றதையடுத்து இவருக்கு இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ந-6)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
*Learn French the French Way*
யாழ்ப்பாணத்தில் உள்ள Alliance Française de Jaffna இன் ஊடாக French மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன.
ஆர்வமுள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.
வகுப்புக்கள் : சனி, ஞாயிறுகளில்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna Phone : 021.2228093
E-mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி வீடு)
மேலதிக விபரங்களை நேரில்/ தொலைபேசியினூடாக பெறலாம்.
(8764)

ஸ்ரீ ராகவரத நாராயணர் தேவஸ்தானம்
அளவெட்டி - நாகேஸ்வரம்
மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்
கிரியாகால நிகழ்ச்சிகள்
06.07.2012 வெள்ளி
எண்ணெய்க்காப்பு காலை 7.00மணி - இரவு 7.00 மணி
07.07.2012 சனி
திரவிய ஹோமம், பூர்வ சந்தானம்
08.07.2012 ஞாயிறு
பகல் 10.57 இற்குள் மஹா கும்பாபிஷேகம்
பொ.ப.சபை
(8766)

## பட்டதாரிகளுக்கு அரச நியமனம்



பட்டதாரிகளுக்கு அரச நியமனம் பெற்றுத் தருவதற்கு முன்னின்று செயற்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இளைஞர் அமைப்பு இணைப்பாளர் அன்ரனி ராங்க துஷார அவர்களுக்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ (சட்டத்தரணி) அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

- யாழ் மாவட்ட பட்டதாரிகள்

(8768)

# இன்று ஒரு தகவல்

## தர்மம்

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அவர் ஒருநாள் மாறுவேடம் பூண்டு கொண்டு நகர்வலம் வந்திருக்கிறார்.

இரவு நேரத்திலே ஒரு குதிரை மேலே ஏறிக்கொண்டு தன்னுடைய நாடு, நகரமெல்லாம் எப்படியிருக்கிறது என்று சுற்றிப் பார்த்துக் கொண்டே வருகிறார்.

நகரத்துக்கு வெளிப்பக்கமாக ஒரு புளிய மரத்தின் அடியிலே ஒரு ஆள் பரிதாபமாக அமர்ந்திருந்தான். அந்தப் பக்கமாக வந்த ராஜா இதைப் பார்த்தார்.

"ஏன் இந்த இரவிலே இப்படி அமர்ந்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

"ஐயா... நான் ஊருக்குள்ளே போக வேண்டும்... என்னை சற்று உங்கள் குதிரை மேலே ஏற்றிக் கொண்டுபோய் விட்டீர்கள் என்றால் மிகவும் உதவியாக இருக்கும்" என்றார்.

"சரி! ஏறிக்கொள்!" என்றார் ராஜா.

"என்னாலே ஏற முடியாது... நீங்கள்தான் என்னைத் தூக்கி அங்கே உட்கார வைக்க வேண்டும். ஏனென்றால்... நான் கை-கால் விளங்காதவன். என்னுடைய இரு கால்களும் உணர்ச்சியே இல்லாத மரக் கட்டை மாதிரி ஆகிவிட்டது. அதனால்தான் நடக்க முடியாமல் இங்கேயே கிடக்கிறேன்!" என்றான்.

ஐயோ! பாவம் என்று பரிதாபப்பட்டு ராஜா கீழே இறங்கினார். அவனை மெல்லத் தூக்கி குதிரை மீது உட்கார வைத்தார், அவ்வளவு தான்... அந்த நபர் குதிரையை அடித்து விரட்டிக் கொண்டு போய் கொண்டிருந்தான்.

ஆமாம்! அவன் உண்மையிலே கை, கால் விளங்காதவன் அல்ல. அவன் ஒரு திருடன்! குதிரையைக் கடத்திக் கொண்டு போவதற்காகத் தான் இது மாதிரி வேடம் போட்டுள்ளான். ராஜா ஏமாந்து போய் விட்டார்.

ராஜாவுக்கு மிகவும் அவமானமாகப் போய்விட்டது. இருந்தாலும் அவமானத்தை ஏற்றுக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவர் இது தொடர்பாக யாரிடமும் கூறவில்லை.

காலங்கள் உருண்டோடின. ஒருநாள் அரண்மனையிலே வழக்குகள் விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. ராஜா ஒவ்வொரு வழக்காக விசாரித்து தீர்ப்பு வழங்கிக் கொண்டிருந்தார். திடீரென ஒரு நபரைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

"மன்னா... இவன் பல இடங்களிலே திருடியிருக்கிறான். கொள்ளையடித்திருக்கிறான். நேற்று இரவு இவன் ஒரு வீட்டினுள் நுழைய முயற்சித்த போது நமது காவலாளிகள் பார்த்துக் கொண்டிருந்து விட்டு அவனை மெல்லப் பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள்.

ராஜா நிமிர்ந்து பார்த்தார். அன்றைக்கு என்னை ஏமாற்றிய அதே நபர்தான் இவன் என்பதை அடையாளம் கண்டு கொண்டார்.

ஆனால், அவனுக்கு இவரை புரிந்து கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அன்றையதினம் ராஜா மாறுவேடத்திலேதான் ஊரை வலம் வந்தார்.

ராஜா, தீர்ப்பு நாளைக்கு வழங்கப்படும் என்று சொல்லிவிட்டு சபையைக் கலைத்து விட்டார். அந்த நபரைக் கொண்டு போய் சிறையிலே அடைத்து விட்டார்கள்.

அன்று இரவு எல்லோரும் ஆழ்ந்த தூக்கத்தில் இருந்த வேளையிலே ராஜா மெதுவாக சிறைக்கூடம் சென்று அந்த நபரைப் பார்த்தார். "என்னை உனக்கு அடையாளம் தெரியாதா?" நன்றாகப் பார்!" என்றார்.

"என்ன இவ்வாறு கேட்கிறீர்கள்? நீதானே மகாராஜா இல்லையா?" என்றான்.

அது இல்லை. இதற்கு முன்பு என்னை எங்கேயாவது கண்டதுண்டா? ஞாபகம் இருக்கிறதா? என்று ராஜா வினவினார்.

"இல்லையே" என்று பதிலளித்தான்.

ராஜா தனது அலங்காரத்தைக் கலைத்தார். உடனே அந்த நபருக்கு ஞாபகம் வந்தது.

"மன்னா! அன்று குதிரையைக் கடத்திவிட்டு போனது உங்களிடம் தானே. என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என்று கூறி காலிலே விழுந்தான்.

நான் சொல்வதைக் கவனமாகக் கேளு. நாளைக்கு நான் தண்டனை வழங்கப்போவது நீ திருட முயன்ற வழக்குக்காக... அன்று என்னை ஏமாற்றியதற்காக உன்னை நான் தண்டிக்கப் போவதில்லை. அத்துடன் உன்னிடம் நான் ஏமாந்த விடயம் தொடர்பாக யாரிடமும் சொல்லி விட வேண்டாம். இந்த இரகசியம் இரண்டு பேருக்கு மட்டுமே தெரிந்ததாக இருக்கட்டும்" என்றார்.

இந்தக் கதையை ஒரு நண்பர் என்னிடம் கூறிவிட்டு "அந்த ராஜா ஏன் அப்படி அந்த நபரிடம் சொன்னார்?" என்று ஒரு கேள்வி கேட்டார். நான் யோசித்து விட்டுப் பதில் சொன்னேன்.

"ராஜாவே திருடனிடம் ஏமாந்து விட்டார் என்ற விடயம் தெரிந்தால் அது மிகவும் கேவலம் ஆகிவிடும். அதனால் அப்படி ஒரு பதிலை சொல்லியிருப்பார்" என்றேன். ஆனால், அது காரணம் இல்லை என்றார்.

"சரி நீங்களே சொல்லுங்கள்?" என்றார். அப்போது அவர்,....

"அதாவது என்ன விடயமென்றால்... அந்தச் சம்பவம் வெளியே தெரிந்து போனால், கஷ்டப்படுகிறவர்களுக்கு கை கொடுக்க எல்லோரும் தயங்க ஆரம்பித்து விடுவார்கள்! உண்மையாக வறுமையில் வாடுபவனைப் பார்த்து கூட இவன் ஏமாத்துப் பேர்வழியாக இருப்பானோ என சந்தேகப்பட ஆரம்பித்து விடுவார்கள். அதன்பின் நாட்டிலே தர்மம் சீரழிந்து விடும். யாரும் உதவி செய்ய முன்வர மாட்டார்கள். அப்படி ஒரு நிலைமை நமது நாட்டுக்கு வந்து விடக்கூடாது- என்பதற்காக ராஜா அப்படி செய்துள்ளார்" இதுதான் நண்பர் கொடுத்த விளக்கம்! ராஜா என்றால் இப்படியல்லவா -இருக்க வேண்டும்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடபகுதியில் கடற்றொழில் சார்ந்த கல்வி அறிவு ஊட்டப்பட வேண்டும்

## பேராசிரியர் சூசை ஆனந்தன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் கடற்றொழில் சார்ந்த கல்வி அறிவும் விழிப்புணர்வும் ஏற்படுத்தப்பட வேண்டும் என யாழ்ப்பாணப் பல்கலைக் கழக புவியியல்துறைப் பேராசிரியர் சூசை ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையின் வடபகுதி கரையோரங்களிலுள்ள வளங்கள் மிகவும் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக மன்னார். வளைகுடா, வடமராட்சி போன்ற கடற்கரையோரங்கள் இவ்வாறு அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

இந்தவிடயம் தொடர்பாக அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வங்களாவிரிகுடா நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட இரண்டாவது மாநாட் டின் போதும் கருத்துக்கள், ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டன.

இலங்கையின் வடபகுதி கடற்கரையோரங்களிலுள்ள வளங்கள் அழிக்கப்படுவதற்கு முக்கிய காரணமாக ரோலர் போன்ற தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளே காரணம் எனவும் அங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தியாவின் தமிழக மீனவர்கள் இலங்கையின் வடபகுதிக்குள் அத்துமீறி ரோலர் படகுகளில் தொழிலில் ஈடுபட்டு வருவது அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்ற கருத்தும் வலியுறுத்தப்பட்டிருந்தது.

அத்தோடு உள்ளூர் மீனவர்களும் தடைசெய்யப்பட்ட ரோலர் படகுகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் இதனால் சிறு தொழிலாளர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் மூன்றாவது மாநாடு இந்தியாவின் கன்னியாகுமரியில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ளது.

இந்த மாநாட்டில் இலங்கையிலிருந்து 15 பேரும் இந்தியாவின் சார்பில் 15 பேரும் பங்கு கொள்ளவுள்ளனர்.

சூழலியல்சார்ந்த அறிவுடையவர்கள் இந்த மாநாட்டில்பங்குகொண்டு வருகின்றனர்.

இந்த மாநாட்டிலும் கடற்றொழில் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளினால் ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன.

எனவே, கடற்றொழில் சார்ந்த கல்வி அறிவு மேம்படுத்தப்படும் போது கடல்வளங்களை அழித்து தொழிலில் ஈடுபடும் முறையும் மாற்றப்படும். கடற்கரையோரங்களும் உரிய முறையில் பாதுகாக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 85 | 90-110 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 150 | 160 |
| தக்காளி | -- | 200 | 100 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | -- | 100 | 90 | 80 |
| கரட் | 100 | 140 | 120 | 160 |
| பூசணி | 70 | 60 | 60 | 60 |
| புடோல் | 70 | 50 | 40 | 60 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 100-110 | 110 | 100 |
| பெரிய வெங்காயம் | 85 | 90 | 90 | 85 |
| பாகற்காய் | 120 | 100 | 160 | 80 |
| வெண்டிக்காய் | 70 | 60 | 80 | 90 |
| கருணைக் கிழங்கு | -- | 140 | -- | -- |
| பயற்றங்காய் | 70 | 60 | 80 | 45 |
| லீக்ஸ் | 140 | 160 | 150 | 150 |
| பீற்றூட் | -- | 70 | 60 | 90 |
| கறிமிளகாய் | 180 | 100 | 150 | 180 |
| முருங்கைக்காய் | 100 | 50 | 110 | 100 |
| போஞ்சி | 160 | 100 | 170 | 150 |
| கத்தரிதம்புள்ள | -- | 60 | 80 | -- |
| கீரை - 1 பிடி | 15-20 | 20 | 30 | 15 |
| தேசிக்காய் | 90-100 | 110 | 90 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 15-25 | 30 | 25 | 16-20 |

# இராசி பலன்

06.07.2012

(ஆனி 22, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு

திருதியை முன்னிரவு 8.57 மணிவரை

திருவோணம் பிற்பகல் 2.55 மணிவரை

இராகுகாலம் 10.28-11.58 மணிவரை

சுபநேரம் 5.58-7.28 மணிவரை

**மேடம்** தொழில் முன்னேற்றகரமாக அமையும், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**இடபம்** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறத் தொடங்கும், தேவையற்ற பகைகள் குறையும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, செலவுகள் அதிகரிக்காமலிருக்க விழிப்புணர்ச்சி தேவை.

**கடகம்** நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறும் நாள், தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், வெளியூர் பயணங்களால் புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**சிங்கம்** பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் சம்பந்தமாக சில முக்கிய முடிவெடுப்பீர்கள், மறைமுக எதிர்ப்புகள் மாறும், சுப காரிய நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** மன நிறைவு கூடும் நாள்,வருமானம் திருப்தி தரும், தள்ளிப்போட்ட காரியமொன்றை இன்று திடீரென செய்து முடிப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, போசன சுகமுண்டு.

**துலாம்** பயந்த சுபாவமுண்டு, பயணங்களால் பலனுண்டு,செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்** திருமண முயற்சிகள் வெற்றி தரும், சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், விரதம், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், உடன் பிறப்புக்கள் மூலம் உதவிகள் கிடைக்கலாம்.

**தனுசு** நாவன்மையால் நல்ல பெயரெடுக்கும் நாள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** தொட்ட காரியம் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை ஏற்படும், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும்.

**கும்பம்** சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்ய வேண்டி வரலாம், மாலை நேரப் பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்,மாற்றங்களால் ஏற்றம் பெறும் நாள்.

**மீனம்** பண வரவு திருப்தி தரும் நாள், விலையுயர்ந்த பொருட்கள் வீடு வந்து சேரலாம், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை கூடும்.

வளவன்

# கலை மற்றும் கலாசார சீரழிவுகள் குறித்து விழிப்புணர்வு அவசியம்

## கலைப்பீடாதிபதி வி.பி.சிவநாதன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக மாணவர்களை இணைத்து சமூக விழிப்புணர்வு கருத்தரங்கொன்றையும் மாநாடுகளையும் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்.குடாநாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கலாசார சீர்கேடுகள் தொடர்பில் கூடிய கவனம் எடுத்துச்செயற்படவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எமது சமூகத்தில் இருந்த பல சபைகள், மன்றங்கள், அமைப்புக்கள் என்பவற்றைத் தற்போது மீளவும் கட்டியெழுப்ப வேண்டியுள்ளது.

கடந்த கால யுத்த அழிவுகளினால் இந்த அமைப்புக்கள் மன்றங்களுடன் பொதுமக்கள் கொண்டிருந்த ஈடுபாட்டில் இடைவெளி ஏற்பட்டுள்ளது.

மேலும் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள மாணவர்களின் கல்வியறிவை வளர்க்க வேண்டிய பொறுப்பும் எமக்குள்ளது.

பல்கலைக்கழககங்கள் பட்டங்களை மட்டும் பெற்றுக்கொள்ளும் இடமாக விளங்காது சமூகத்தினை முன்னோக்கிக்கொண்டு செல்வதற்கு சிறந்த ஊடகமாக செயற்படவேண்டும்.

இதனடிப்படையில்தான் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு பாடசாலைகள் தோறும் கல்வியறிவை மேம்படுத்தவும் கலாசார சீர்கேடுகள் இடம்பெறாமல் தடுக்கவும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடத்தத்திட்டமிட்டுள்ளேன்.

கலைப்பீட மாணவர்கள் என்பதால் கலை, கலாசார நிகழ்வுகளையும் நடத்தமுடியும். இதனூடாக கலாசார சீர்கேடுகளும் ஏற்படாதவாறு சமூகத்தைப் பாதுகாக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ- 6)

## தரம் 5 மாணவர்களுக்கு செயலமர்வு இன்று

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களுக்கான நாளை அமைப்பின் ஒழுங்கமைப்பின் கீழ் ஆரம்பக் கல்விச் செயற்பாடுகள் தொடர்பான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை யாழ். இந்துக் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்திலும் யாழ். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்திலும் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வுக்கு தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களையும் பொறுப்பாசிரியர்களையும் அனுப்பிவைக்குமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கேட்டுள்ளார். (அ-9)

## யாழ்.செய்திகள்...



## மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டியிருப்பதால் நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6 மணிவரை பின்வரும் பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர்ப்பிரதேசம், தீவகப் பிரதேசம், அராலி, கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப் பகுதி, திருநெல்வேலிநகரம், மருத்துவபீடப்பிரதேசம், ஆடியபாதம் வீதி கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம்ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## கணவனின் வெறியாட்டத்தில் மனைவி, மகள் மீது கத்தி வீச்சு

(கரவெட்டி)

கணவர் மது வெறியாட்டத்தால் மனைவி மற்றும் மகள்மீது கத்தி வீச்சை மேற்கொண்டதில் மனைவி மற்றும் மகள் வெட்டுக்காயங்களுக்கு உள்ளாகி பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இச்சம்பவம் பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, சம்பவதினம் மதுபோதையில் வந்த குறித்த நபர் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு தனது மனைவியையும் மகளையும் கத்தியால் வெட்டிக் காயப்படுத்தியுள்ளார்.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த செல்வராசா ரதி (வயது 43), அவருடைய மகள் செல்வராசா நிரோஷா (வயது 14) ஆகிய இருவருமே கத்தி வெட்டுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றனர். (அ-3-24)

## தூக்கில் தொங்கிய நிலையில் சடலம் மீட்பு

(கரவெட்டி)

வடமராட்சி நெல்லியடியில் இளம் குடும்பப் பெண்ணின் சடலம் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

நெல்லியடி கொடிகாமம் வீதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் மாலை 4 மணிக்கு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது, வீட்டில் யாரும் இல்லாதவேளை குறித்த இளம் குடும்பப் பெண் தூக்கில் தொங்கி ஆபத்தான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். பெண்ணைப் பரிசோதித்த வைத்தியர்கள் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் அதேயிடத்தைச்சேர்ந்த செ.நிஷாந்தி (வயது 27) என்ற இரு பிள்ளைகளின் தாயே உயிரிழந்தவராவார். சடலம் மரணவிசாரணை மற்றும் பிரேத பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-3-24)

## குருத்துவப் பொன்விழா

திருமறைக்கலாமன்ற இயக்குநர் நீ.மரிய சேவியர் அடிகளாரின் குருத்துவப் பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் தூய மரியன்னை பேராலயத்தில் குருத்துவப்பொன்விழா நன்றித் திருப்பலியுடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு விழா நாயகனுக்கான கௌரவிப்பும் அவருடன் இணைந்து குருத்துவப் பணி வாழ்வில் 50 ஆண்டுகளை நிறைவுசெய்யும் பொன்விழா நாயகர்களான திருமலை மட்டுநகர் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை,மன்னார் மடுமாதா சிறியகுருமட அதிபர்சேவியர்குரூஸ்அடிகளார் ஆகியோரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும் அடிகளாரின் குருத்துவப் பொன்விழா நினைவு நூலாகிய Golden Prism நூல் வெளியீடு கலைத்தூது கலையகத்திலும் திருமறைக்கலாமன்ற அரங்கில் மாலை 6.30 மணிக்கு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுமென திருமறைக் கலாமன்றம் அறிவித்துள்ளது. (அ-9)

# யா/ அராலி சரஸ்வதி மத்திய மகா வித்தியின் நூற்றாண்டுவிழா இரண்டாம் நாள் நிகழ்வுகள்

யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டுவிழா இன்று தொடக்கம் நாளை மறுதினம் வரை தொடர்ந்து 3 நாட்கள் கொண்டாடப்படவுள்ளது.

இந்நிகழ்வின் இரண்டாம் நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தட்சணாமூர்த்தி விசுவநாதர் அரங்கில் வித்தியாலய அபிவிருத்திச் சங்க செயலாளர் மா.ஜெகராஜா தலைமையில் நடைபெறும்.

அன்றையதினம் பிற்பகல் 3 மணிக்கு வித்தியாலய முன் பகுதியில் இருந்து மங்கள இசை முழங்க விருந்தினர்கள் நிகழ்வு மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவர்.

அதனைத் தொடர்ந்து மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன்,அவரது பாரியார் ஆசிரியர் திருமதி இ.சத்தியசீலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வியமைச்சின் பிரதிக் கல்விச்செயலாளர் ப.விக்னேஸ்வரன், வலிகாம வலய திட்டமிடற்பிரிவு பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன், யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ், யாழ் பல்கலைக்கழக முன்னாள் வருகை விரிவுரையாளர் கலாநிதி ம.சண்முகதாஸ், சங்கானை கோட்டக்கல்வி அதிகாரி துரைஎங்கரசு, ஓய்வு பெற்ற உடற்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் க.குமாரசாமி, யாழ். பல்கலைக் கழக பதிவாளர் திருமதி சி.குமாரசாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.


இந்நிகழ்வின் போது புதிய உயர் கல்லூரி விரிவுரையாளர் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் வெள்ளைக் கமலத்திலே எனும் தலைப்பிலான சிறப்புக் கவியரங்கம் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து இலக்கியச்சுவை என்னும் தலைப்பில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், புதுமைப்பெண்ணின் மறுபக்கம் என்னும் தலைப்பில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வுகள், பாடசாலை மாணவர்களின் சிறப்புக்கலை நிகழ்ச்சிகள். வித்தியாலய உயர்தர வகுப்பு மாணவிகளின் சிறப்பு கர்நாடக சங்கீத இசை மழை, இராமநாதன் நுண்கலைக் கல்லூரி மாணவிகளின் சிறப்பு நாட்டியாஞ்சலி, வித்தியாலய தரம் 9, 10 மாணவர்களின் சத்தியவான் சாவித்திரி இசை நாடகம் என்பனவும் நடைபெறும். (அ-2-9)





இலங்கை வங்கியின் விரிவாக்கல் கிளை அச்சுவேலி சிறுப்பிட்டியில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இலங்கை வங்கியின் தலைவர் டாக்டர் காமினி விக்கிரமசிங்க வாடிக்கையாளர்களிடம் முதலாவது வைப்புப்பணத்தை பெற்றுகொண்டதோடு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்களையும் வாடிக்கையாளர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

# அரசாங்கத்தை கவிழ்க்கும் தகவல்கள்

# ஸ்ரீலங்கா மிரர் கணனிகளில் இருந்தன

## குற்றப்புலனாய்வு பிரிவினர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் எதிராக பொய்யான தகவல்களை வெளியிட்டு அரசாங்கத்தை கவிழ்க்கும் பாரிய திட்டங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய கணனிகள் ஸ்ரீலங்கா மிரர் இணையத்தள அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்டதாகவும் இந்த விடயங்களை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனி பொறியியலாளர்கள் உறுதிப்படுத்தியிருப்பதாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதவான் பிரசன்ன சில்வாவிடம் சமர்ப்பித்த மேலதிக விசாரணை அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள இணையத்தளமான லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்திற்கு தகவல்களை வழங்க பயன்படுத்தப்பட்ட கணனியும் அங்கிருந்து பொறியியலாளர்களினால் கண்டு பிடிக்கப்பட்டதாக குற்றப்புலனாய்வு பிரிவினர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்கும் எதிராக பொய்யான தகவல்களை வெளியிட்டு மக்களை தவறாக வழி நடத்தும் அரச விரோத செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தமை குறித்து கடந்த மாதம் 19 ஆம் திகதி விசேட அதிரடிப்படையின் பணிப்பாளரான பிரதி பொலிஸ்மா அதிபருக்கு கிடைத்த இரகசிய தகவல்களின் அடிப்படையில் பொலிஸாரின் கணனி பிரிவின் பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.எஸ். சோனாரட்ன இது சம்பந்தமான விசாரணைகளை நடத்தியுள்ளார்.

இலக்கம் 71- போரி வீதி எத்துல் கோட்டே என்ற முகவரியில் உள்ள வீடொன்றில் இயங்கி வந்த இந்த இணையத்தளத்தின் மூலம் அரச விரோத செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தகவல் கிடைத்துள்ளதுடன் ஜனாதிபதிக்கு அவமதிப்பையும் அகௌரவத்தையும் ஏற்படுத்தும் வகையிலான பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் கூறியுள்ளனர். (அ-2)

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி 20 பேர் வைத்தியசாலையில் அனுமதி

(கொழும்பு)

சிகிரியாவில் சிங்கத்தின் பாதத்திற்கு அருகாமையில் குளவிக் கொட்டுக்கு இலக்காகி 20 பேர் காயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை நடைபெற்றுள்ளது. குளவிக் கொட்டுக்கு இலக்காகி காயமடைந்தவர்களில் 2 கிரேக்க பிரஜைகளும் இரு சிறுவர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக சிகிரியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சிகிரியாவுக்கு வரும் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் நுழைவாயிலுக்குள் உள்நுழையும்வேளையில் பல தடவைகள் குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தேர்தல் கட்டம் கட்டமாக நடத்துவதனை தடுக்க சட்டத்தில் இடமில்லை-தேசப்பிரிய

(கொழும்பு)

மாகாணசபைத் தேர்தல் கட்டம்கட்டமாக நடத்தப்படுவதனை தடுக்க சட்டத்தில் இடமில்லை என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அமைத்தாலும் கட்டம்கட்டமாக தேர்தல் நடத்துவதனை தடுக்க முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

1988 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முதலாவது தேர்தல் தொடக்கம் நாட்டில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களும் இவ்வாறு கட்டம் கட்டமாகவே நடத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரேநாளில் நாட்டின் அனைத்து மாகாண சபைத் தேர்தல்களும் நடத்தப்பட்டால் பாரியளவில் பணத்தை சேமிக்க முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். தேர்தல் செலவுகளை குறைக்க முயற்சிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்கு தொடர்ந்தும் குரல் கொடுக்கப்படும்

### அரசாங்கம் கூறுகிறது

பாலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்தும் குரல் கொடுக்கப்படும் என இலங்கை அறிவித்துள்ளது.

பாலஸ்தீன மக்கள் தொடர்ச்சியாக எதிர்நோக்கி வரும் நெருக்கடிகள் கவலையளிப்பதாக இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளது. பாலஸ்தீன-இஸ்ரேல் பிரச்சினைக்கு இதுவரையில் காத்திரமான ஓர் தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படாமை ஏமாற்றமளிப்பதாக குறிப்பிட்டுள்ளது.

பாலஸ்தீனத்திற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பு முழு உறுப்புரிமை வழங்க வேண்டுமென இலங்கை கோரிக்கை விடுத்துள்ளது.

சுயாதீன பாலஸ்தீன இராச்சியமொன்று அமைக்கப்பட வேண்டும் என்பதே இலங்கையின் நிலைப்பாடாக அமைந்துள்ளது என ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கலந்து கொண்டுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ-2)

## மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

குப்பிளான் வீரமனை கன்னிமார் கௌரி அம்பாள் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் யாவும் நேற்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறுகிறது.

நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை அடியார்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதலும் நடைபெறுமென ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-9)

## கிழக்கு மாகாணத்தில் 70 வீதமான பலம் எதிர்க்கட்சிக்கே- தயா கமகே

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 30 வீத பலமே இருப்பதாகவும் 70 வீதமான பலம் எதிர்க்கட்சிக்கே இருக்கிறது. கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவார் என எதிர்பார்க்கப்படும் அந்த கட்சியின் தேசிய அமைப்பாளர் தயா கமகே தெரிவித்துள்ளார்.

தமிழரான முதலமைச்சர் ஒருவர் கிழக்கில் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் அவர் தமிழ் மக்களுக்கு செய்த எந்த நன்மையுமில்லை எனவும் எதிர்கட்சியில் போட்டியிட்டு அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட முஸ்லிம் பிரதிநிதிகளால் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களுக்கும் எவ்விதமான நன்மையும் கிடைக்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

யானை சின்னத்தில் போட்டியிட்டு கிழக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டபின்னர் அவர்களுக்கு மேலதிகமாக வழங்கப்படும் 30 ஆயிரம் ரூபா பணம் இன்னும் அவர்களின் பைகளிலேயே உள்ளது.

அதனை பயன்படுத்தி அவர்கள் முஸ்லிம் மக்களுக்கு நிவாரணங்கள் எதனையும் வழங்குவதில்லை. தமது பிரதிநிதிகளால் காட்டிக் கொடுக்கப்பட்ட பின்னர் முஸ்லிம் மக்களுக்காக குரல் கொடுத்தது ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரமே.

கிழக்கு மாகாண மக்கள், தமிழ் தலைவர்களையும் முஸ்லிம் தலைவர்களை உரசி பார்த்து அறிந்துள்ளனர். தற்போது மீதம் இருப்பது தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட சகல மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய சிங்கள தலைவர்கள் மாத்திரமே. ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கையில் தமிழ், சிங்கள, முஸ்லிம் உள்ளிட்ட அனைத்து இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி எனவும் தயா கமகே கூறியுள்ளார். (அ-2)

## வெளிநாட்டுத் தூதுவர்கள் 80 பேர் இலங்கை வருகை

(சிவநகர்)

வெளிநாட்டு தூதுவர்கள் 80 பேர் இன்று இலங்கைக்கு வருகை தந்து எதிர்வரும் 13 ஆம் திகதிவரை அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்களை பார்வையிடவுள்ளனர்.

இதில் ஆரம்பகட்டமாக வவுனியா, மன்னார் அம்பாந் தோட்டை, ஊவாமாகாணம், அம்பாறை, மட்டக்களப்பு போன்ற இடங்களில் உள்ள அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்களைப் அவர்கள் பார்வையிடவுள்ளனர்.

எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்.மாவட்டத்தில் உள்ள அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்களைப் பார் வையிடுவதுடன் மறுநாள் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கரந்தாய்குள பகுதியில் அமைக்கப்பட்ட இந்திய வீடமைப்புத் திட்டம் மற்றும் முகமாலை யுத்த பிரதேசம், வைத் தியசாலை, மின்சாரசபை வேலைத் திட்டங்கள், மத்திய கல்லூரி, டிப்போ சந்தியில் அமைந்துள்ள யுத்த நினைவுச் சின்னம், புதிய சந்தைக் கட்டடம் என்பவற்றையும் பார்வையிடவுள்ளனர்.

மேலும் புகையிரதப் பாதையின் வேலைத் திட்டம், புதிதாக அமைக்கப்படும் கிளிநொச்சி மாவட்ட செயலகக் கட்டடம் என்பவற்றுடன் பரந்தன் விதைப்பண்ணை, ஏ-9 வீதி புனரமைப்பு, பரந்தன் சந்தியில் இருந்து தர்மபுரம் வரையான ஏ-35 வீதி, பயிர்ச்செய்கைகள், தர்மபுர வைத்தியசாலை, கல்மடுக்குளம் ஆகியவற்றையும் பார்வையிடவுள்ளனர்.

பொருளாதார அபிவிருத்திஅமைச்சினால்குறுகிய காலத்தில் நடைபெற்ற அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிடுவதே இவர்களது பிரதான நோக்கம் என மீள் எழுச்சித்திட்ட கிளிநொச்சி மாவட்ட பிரதி திட்டப் பணிப்பாளர் எஸ்.விஜய கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (அ-3-254)


## பிரார்த்தனைஅஞ்சலி



அமரர் ஸ்ரீமான் சிவபாதம் சிவகுமார் அவர்கள்

(கனடா சிறந்த விளையாட்டு வீரர், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் அவர்களின் சகோதரன்)

கனடாவில் கடந்த 01.07.2012 அன்று திடீரென சிவபதமடைந்த செய்தி கேட்டுத் துணுக்குற்றோம்.

அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தார்க்கும் அவர்தம் தாயார், சகோதரர்கள், உறவினர்களுக்கும், நெல்லண்டை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் வடபத்திரகாளியம்மன், ஸ்ரீ இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளியம்மன் ஆறுதல் தரவேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்

சிவ ஸ்ரீ தியாகசோமஸ்கந்தராஜக் குருக்கள்

உப அதிபர் யா/ அம்பன் அ.மி.த.க. பாடசாலை,

பிரதம குரு ஆதீனகர்த்தா, கும்பளை நெல்லண்டை பத்திரகாளியம்மன் தேவஸ்தானம்.

(8762)

# கைதிகள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் மனிதவுரிமை அமைப்புக்களிடம் முறையிடுவோம்

## டென்மார்க் தமிழர் பேரவை அறிக்கை

(கொழும்பு)

**போர் முடிவுற்று மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் எந்தவித நீதி விசாரணைகளும் இன்றி இலங்கை, இந்திய சிறைகளில் காலவரம்பின்றி தொடர்ந்து பல ஆண்டுகளாக ஈழத்தமிழ் அரசியல் கைதிகளை தடுத்து வைத்திருப்பதையும் அவர்கள் மீது கொடுமைகள், சித்திரவதைகள் இழைப்பதனையும் டென்மார்க் தமிழர் பேரவை சார்பாக ஈழத்தமிழர்களாகிய நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.**

இலங்கையில் போர் முடிபடைவதற்கு முன்னரும் மற்றும் போர் முடிந்த பின்னருமாக பல நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகள் காலவரையறையின்றி எந்தவித நீதி விசாரணைகளும் இன்றி தொடர்ந்து சிறைகளில் அடைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டு சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள்.

அதேபோல் இந்தியாவிலும் செங்கல்பட்டு போன்ற சிறைகளில் பல ஈழத்தமிழ் அகதிகள் காலவரையறையின்றியும் நீதி விசாரணைகள் இன்றியும் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

எங்கள் ஈழத்தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருவதென்பது இந்த அரசுகளின் ஒட்டுமொத்த தமிழர்கள் மீதான கசப்புணர்வின் வெளிப்பாடாகவே நோக்கத்தக்கதாக உள்ளது.

அண்மையில் இலங்கை வவுனியா சிறையிலிருந்து 30 தமிழர்கள் அடித்து கைகள், கால்கள் முறிக்கப்பட்டு இரத்தம் தோய்ந்த உடைகளுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் மூவரின் நிலை மிக மோசமாக உள்ளதாகவும் அறிகிறோம்.

செங்கல்பட்டு சிறப்பு முகாமிலும் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி எங்கள் ஈழத் தமிழ் அரசியல் கைதிகள் பல நாட்களாக தொடர்ந்து உணவுத் தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அகிம்சையை மதிக்கின்ற நாடாகவும் அகிம்சை வழியில் போராடி சுதந்திரம் பெற்றதாகவும் தன்னை கூறிக் கொள்ளும் இந்தியா, சிறைகளில் கொடுமைப்படுத்திவரும் இலங்கைத் தமிழர்கள் விடயத்தில் இரக்கமின்றி, மனித நேயமின்றி செயற்படுவதை ஈழத் தமிழர்களாகிய எமக்கு மிகவும் வேதனையையும் ஏமாற்றத்தையும் தருகிறது.

அத்துடன் இந்த விடயத்தை நாம் டென்மார்க்கிலுள்ள ஐரோப்பிய ஆணையப் பிரதிநிதித்துவத்தின் கவனத்துக்கு கொண்டு வந்து அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுள்ளோம்.

மேலும் அனைத்துலக மனிதவுரிமை அமைப்புகளின் கவனத்துக்குக் கொண்டு வருவதோடு சம்பந்தப்பட்ட பிரதிநிதிகளோடு சந்திப்புக்களை மேற்கொண்டு ஈழத்தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தைத் தெரிவித்துவருவதோடு அவர்களை உடனடியாக விடுதலை செய்வதற்கு வழிவகை செய்யுமாறு வலியுறுத்துகின்றோம்.

(அ-2)

## கப்பம் கோரிய விமானப்படை வீரர் கைது செய்யப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பு நவலோக வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் தாதி ஒருவரிடம் கப்பம் கோரிய இலங்கை விமானப்படை வீரர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

விமானப்படையைச் சேர்ந்த யொஹான் விஸ்வஜித் என்ற நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த தாதியிடம் இரண்டு இலட்சம் ரூபா கப்பம் கோரியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கையடக்கத் தொலைபேசி குறுந்தகவல் ஊடாக கப்பம் கோரியதாகத் தெரிவிக்கப்படுகிறது. மகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துவதாகத் தெரிவித்து கப்பம் கோரப்பட்டுள்ளது.

சந்தேக நபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் கனிஷ்க விஜேரட்ன உத்தரவிட்டுள்ளார்.

(அ-2)

## இலங்கைத்தமிழ் இளைஞன் சாதனை

இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்க தமிழ் இளைஞர் ஒருவர் புதிய கண்டு பிடிப்பு ஒன்றின் மூலம் சாதனை படைத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ரியோ 20 மாநாட்டில் இந்தத் தமிழ் இளைஞரின் கண்டுபிடிப்பு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட அமெரிக்க தமிழரான சாயாந்த் சின்னராசா (வயது 18) என்ற இளைஞரே இவ்வாறு சாதனை படைத்துள்ளார்.

சாயாந்த் நீரை இலகுவில் சுத்திகரிக்கக் கூடிய கருவியொன்றை கண்டுபிடித்து சாதனை படைத்துள்ளார். ஒரு நிமிடத்தில் ஒரு சைக்கிள் டயருக்கு காற்று நிரப்பும் அழுத்தத்தில் 15 கலன் நீரை சுத்திகரிக்கக்கூடிய கருவியொன்றை அவர் தயாரித்துள்ளார்.

இந்தக் கருவி அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மிகவும் எளிதில் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

(அ-2)

## 10 இலங்கை மீனவர்கள் நாடு திரும்பவுள்ளனர்


இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 10 பேர் இரண்டு படகுகளுடன் நாடு திரும்பவுள்ளனர்.

நீர்கொழும்பு மற்றும் திருகோணமலை மீன்பிடி துறைமுகங்களில் இருந்து இந்த மீனவர்கள் கடந்த ஏப்ரல், மே மாதங்களில் கடலுக்கு சென்றிருந்தனர்.

கடல் எல்லையை மீறிய குற்றச்சாட்டின் பேரில் இலங்கை மீனவர்கள் பத்து பேரும் இந்திய கரையோரப் பாதுகாப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் 10 இலங்கை மீனவர்கள் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் இரண்டு படகுகளும் அந்நாட்டின் பொறுப்பில் உள்ளதாக கடற்றொழில் அமைச்சு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-2)



மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிராக கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை களுபோவில போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெறுவதை படத்தில் காணலாம்.

## முள்ளிவாய்க்கால் மீள்குடியமர்வு கண்துடைப்பு வேலைத்திட்டம்

### அக்கிராம மக்கள் குற்றச்சாட்டு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு- முள்ளிவாய்க்கால் பகுதியில் மக்களை மீள்குடியேற்றப்போவதாக படையினர் அறிவித்துள்ள நிலையில் இது வொரு கண்துடைப்பு வேலைத்திட்டம் என மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இறுதி யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட சில பகுதிகள் தொடர்ந்தும் படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப்பட்டுள்ளதுடன் இப்பகுதியில் பெரும் படை முகாம்களும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் யுத்த காலத்தில் கைவிடப்பட்ட பொதுமக்களின் பெருமளவு வாகனங்கள், உயிரிழந்த மக்களின் உயிரெச்சங்கள் போன்றனவும் உள்ளன. இந்நிலையிலேயே குறித்த பகுதியில் மீள்குடியேற்றத்தை அரசாங்கம் தாமதப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதனால் இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தொடர்ந்தும் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருக்கின்றனர்.

இதனால் அழுத்தங்களும் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் அந்த அழுத்தங்களை குறைத்துக் கொள்வதற்காக முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் வீதியோரத்தில் மக்களை குடியேற்ற அரசு திட்டமிட்டு வருகின்றது.

இதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை என தெரிவிக்கப்படுகிறது.

(அ-2)

## இலங்கை பத்திரிகை கவுன்சிலில் இணையத்தளங்களும் உள்ளடக்கம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள செய்தி இணையத்தள ஊடகங்களுக்கும் இலங்கை பத்திரிகை கவுன்சில் சட்டம் செயற்படுத்தப்படவுள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

செய்தி இணையத்தளங்களை பதிவு செய்ய நடவடிக்கைகளை ஊடகத்துறை அமைச்சு மேற்கொண்டு வருவதாக அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நேற்று உரையாற்றிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டார்.

சட்ட திருத்தத்தின் பின் செய்தி இணையங்களும் இலங்கை பத்திரிகை கவுன்சிலில் பதியப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

(அ-9)

# இசட் புள்ளி பிணக்கு தீர்வுக்கு தெரிவுக்குழு அமைக்க வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் ரணில் கோரிக்கை

(கொழும்பு)

இசட் புள்ளி முறைமையினால் மாணவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவதனை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இசட் புள்ளி பிணக்கு தொடர்பில் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றில் ஆற்றிய விசேட உரையின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இசட் புள்ளி தொடர்பில் அரசாங்கம் தெளிவான திட்டமொன்றை வகுக்க வேண்டும். பரீட்சை முறைமை மற்றும் இலவசக் கல்வி முறைமை தொடர்பிலான நம்பிக்கை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

இசட் புள்ளி பிணக்கு தொடர்பில் தீர்வு காண நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்க வேண்டும். இலவச கல்வியை அடிப்படை உரிமைகளில் ஒன்றாக அரசாங்கம் பிரகடனம் செய்ய வேண்டும்.

அமைச்சர்களும் அதிகாரிகளும் ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி பிரச்சினையிலிருந்து தப்பிக்க முயற்சிக்கின்றனரே தவிர பிரச்சினைக்கு தீர்வு வழங்க முன்வரவில்லை என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

(அ-2)

# இசட் புள்ளி தொடர்பாக தெரிவுக்குழு நியமிக்கப்படும்

## அமைச்சர் திஸாநாயக்க பதில்

இசட் புள்ளிகளை மீளக்கணித்தல் தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை கண்காணிப்பதற்கு பொறுப்பாக சிரேஷ்ட பேராசிரியர் ஆர்.ஓ. தாட்டில் தலைமையிலான மூவர் கொண்ட குழுவொன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிப்பார் என அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரம தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்கும் போதே உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க இவ்வாறு கூறினார்.

புதிய பாடத்திட்டத்திற்கும் பழைய பாடத்திட்டத்திற்கும் தனித்தனியாக இசட் புள்ளிகளை தயாரிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயற்சி

## அமைச்சர் கெஹலிய கவலை

(கொழும்பு)

மனிதக் கடத்தலுக்கு பாதுகாப்பான இடமென தவறாக குற்றஞ்சாட்டி இலங்கையின் நற்பெயருக்கு களங்கம் உண்டாக்க முயலும் உள்நோக்கம் கொண்ட சக்திகள் செயற்படுவதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், அண்மையில் கைது செய்யப்பட்ட அல்லது கவிழ்ந்த படகுகளில் இருந்து காப்பாற்றப்பட்ட சம்பவங்கள் பலவற்றில் இலங்கையைச் சேர்ந்த புகலிடம் கோருவோர் காணப்படவில்லை.

அடைக்கலம் கோருவோர் இலங்கையில் இருந்து புறப்பட்டதாக கூறி இலங்கையை சம்பந்தப்படுத்தும் வகையில் தவறாக தகவல்கள் பரப்பப்பட்ட பல சம்புவங்கள் அண்மையில் நடந்துள்ளன. இவை உண்மையில்லாத புனையப்பட்ட தகவல்கள் ஆகும் எனவும் அவர் கூறினார்.

தமது கபட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சுய இலாப நோக்கம் கொண்ட சக்திகள் அடைக்கலம் கோரும் சம்பவங்களில் இலங்கையின் பெயரை சேர்த்து விடுவதாக தெரிகின்றதெனவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

பல சம்பவங்களில் அடைக்கலம் கோருவோர் இலங்கையிலிருந்து புறப்பட்டதாக கூறப்பட்டு பின்னர் அது மறுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். (அ-2)

# முன்னாள் போராளிகளுக்கு சாரதிப் பயிற்சிகள்

## புனர்வாழ்வு அமைச்சு தகவல்

(கொழும்பு)

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு சாரதிப்பயிற்சிகள் வழங்க நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளதாக புனர்வாழ்வு அமைச்சு தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமான விபரங்களை வடக்கு, கிழக்கில் உள்ள பிரதேச செயலாளர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்களிடம் சுற்றுநிருபம் மூலம் வேண்டியுள்ளது.

சாரதி பயிற்சி பெற விரும்புகின்ற புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலையானவர்கள் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பணிமனை மற்றும் கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டும் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அமைச்சின் அலுவலர் ஒருவர் தெரிவித்துள்ளார். (அ-2)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1044-புனித ரோமப் பேரரசின் 3-ம் ஹென்றி ஹங்கேரி மீது படையெடுத்தான்.

★ 1189-முதலாம் ரிச்சார்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.

★ 1483-மூன்றாம் ரிச்சார்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்.

★ 1535-சேர் தோமஸ் மோர் நாட்டுத் துரோகத்துக்காக இங்கிலாந்தின் எட்டாம் ஹென்றியினால் தூக்கிலிடப்பட்டார்.

★ 1560-ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் எடின்பரோ ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

★ 1785-டொலர் ஐக்கிய அமெரிக்காவின் நாணய அலகாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

★ 1854-ஐக்கிய அமெரிக்காவின் குடியரசுக் கட்சியின் முதலாவது மாநாடு மிச்சிகனில் நடைபெற்றது.

★ 1885-பிரெஞ்சு வேதியியலாளர் லூயி பாஸ்டர் தான் கண்டுபிடித்த தடுப்பூசி மருந்தை விசர்நாய் ஒன்றினால் கடிபட்ட 9 வயது யோசப் மைசிட்டர் என்ற சிறுவனில் வெற்றிகரமாகச் சோதனை செய்தார்.

★ 1908-றொபேர்ட் பியரி ஆர்க்டிக்குக்கான தனது பயணத்தை ஆரம்பித்தார்.இப் பயணத்தில் அவர் வட முனையை அடைந்தார்.

★ 1935 -சிங்கப்பூரின் தமிழ் நாளிதழ் தமிழ் முரசு ஆரம்பிக்கப்பட்டது.

★ 1939-ஜேர்மனியில் இருந்த கடைசி யூத தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டன.

★ 1947-சோவியத் ஒன்றியம் ஏகே-47 துப்பாக்கிகளை தயாரிக்க ஆரம்பித்தது.

★ 1956-சிங்களம் இலங்கையின் அதிகார பூர்வ மொழியானது.

★ 1962-இலங்கைப் பிரதமர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கவைச் கொலை செய்த குற்றத்திற்காக சோமாராம தேரர் என்ற பௌத்த தேரர் தூக்கிலிடப்பட்டார்.

★ 1964-மலாவி ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 1966-மலாவி குடியரசாகியது.

★ 1967-நைஜீரியப் படையினர் பயாஃப் ராவினுள் நுழைந்து போரை ஆரம்பித்தனர்.

★ 1975-கொமொரோஸ் பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

★ 2005-லண்டன் நகரம் 2012 ஆம் ஆண்டின் ஒலிம்பிக் விளையாட்டுக்களை நடத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

★ 2006- 44 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தோனேசியா- சீனப் போரின்போது மூடப்பட்ட சிக்கிமையும் திபெத்தையும் இணைக்கும் நதுலா பாலம் மீண்டும் திறக்கப்பட்டது.

**பிறப்புக்கள்**

★ 1870-பரிதிமாற் கலைஞர்,தமிழறிஞர்(இ.1903)

★ 1946-ஜோர்ஜ் டபிள்யூ.புஷ், ஐக்கிய அமெரிக்காவின் 43ஆவது ஜனாதிபதி

★ 1946-சில்வெஸ்ரர் ஸ்ரலோன், அமெரிக்கத் திரைப்பட நடிகர்

**இறப்புக்கள்**

★ 1991-என்.ஆர்.சின்னராசா, ஈழத்தின் தவில் மேதை (பி.1934)

★ 1991-கோவை மகேசன், ஈழத்து எழுத்தாளர், பத்திரிகையாளர் (பி.1938)

★ 2002-திருபாய் அம்பானி, இந்தியத் தொழிலதிபர் (பி.1932)

★ 2005-கிளோட் சைமன், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1913)



திருபாய் என்று அழைக்கப்படும் தீரஜ்லால் ஹிராசந்த் அம்பானி (28 டிசம்பர் 1932-ஜூலை 6 2002) குடிசையில் இருந்து கோபுரத்திற்கு உயர்ந்த இந்திய வர்த்தக உலக ஜாம்பவான். அம்பானி குஜ்ராத்தில் பிறந்தார். 16 வயதானபோது அம்பானி ஏமனுக்கு சென்று அங்கு 300 ரூபாய் சம்பளத்தில் வேலைக்குத் சேர்ந்தார்.

அவருக்கும் கோகிலா பென்னுக்கும் திருமணம் நடந்தது. முகேஷ் மற்றும் அனில் என 2 மகன்களும் நிதா கோதாரி மற்றும் ரினா சல்கோன்கர் என 2 மகள்களும் பிறந்தனர்.

திருபாய் அம்பானி பத்தாண்டுகள் கழித்து இந்தியா திரும்பினார். ஏமெனில் உடன் வேலை பார்த்த தனது உறவினர் சம்பக்லால் தமானி உடன் இணைந்து மஜின் என்ற நிறுவனத்தை ஆரம்பித்தார். மஜின் நிறுவனம் பாலியஸ்டர் நூல் இறக்குமதியும் மிளகாய் ஏற்றுமதியும் செய்யு ஆரம்பித்தது.

1965-ம் ஆண்டில் சம்பக்லால் தமானியும் திருபாய் அம்பானியும் தங்கள் கூட்டு வணிகத்தை முடித்துக் கொண்டனர். திருபாய் தனது சொந்த நிறுவனத்தை ஆரம்பித்தார்.

அம்பானியின் மொத்த சொத்து மதிப்பு 1970களின் பிற்பகுதியில் சுமார் 10 இலட்சம் ரூபாய் இருந்திருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. அவரது மனிதவள நிர்வாகத்திறன் அபாரமானது. அவர் எப்போதும் திறந்த கதவு கொள்கையைப் பின்பற்றினார். ஊழியர்கள் அவரது அறைக்குள் சென்று தங்களது பிரச்சினைகளை அவருடன் நேரடியாக விவாதிக்க முடியும்.

துணி வியாபாரத்தில் நல்ல வாய்ப்பு இருப்பதை உணர்ந்த திருபாய், தனது முதல் நூற்பாலையை அகமதாபாத்தில் உள்ள நரோதாவில் 1977 ஆம் ஆண்டில் ஆரம்பித்தார்.

இந்தியாவில் பங்கு முதலீட்டு பழக்கத்தை பரவலாக்கிய பெருமை திருபாய் அம்பானிக்கு உரியது. 1977ஆம் ஆண்டில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து 58 ஆயிரத்திற்கும் அதிகமான சிறு முதலீட்டாளர்கள் ரிலையன்ஸின் தொடக்கப் பொதுப் பங்கு வெளியீட்டை வாங்கினர். ஆண்டுப் பொதுக் கூட்டங்களை விளையாட்டு அரங்கங்களில் நடத்திய முதல் தனியார் துறை நிறுவனம் ரிலையன்ஸ் குழுமம் தான். முதல் முறையாக முதலீடு செய்யும் பெரும் எண்ணிக்கையிலான சில்லறை முதலீட்டாளர்கள் ரிலையன்ஸில் முதலீடு செய்யும் வகையில் திருபாய் அம்பானியால் நம்பிக்கையேற்படுத்த முடிந்தது. 1980களின் ஆரம்பித்தில் அம்பானியின் மொத்த சொத்து மதிப்பு சுமார் 1 பில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டது.

இதேவேளை திருபாய் அம்பானி நோயால் பாதிப்புற அவரது பிள்ளைகளான முகேஷ் அம்பானியும் அனில் அம்பானியும் வணிகத்தை கவனித்துக் கொண்டனர்.

மாரடைப்பு திருபாய் அம்பானியைத் தாக்கியது. அவர் ஜூலை 6, 2002இல் காலமானார்.

திருபாய் இறந்த சமயத்தில் ரிலையன்ஸ் குழுமம் மொத்த விற்றுமுதலாய் ரூ.75,000 கோடி அல்லது 15 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கொண்டிருந்தது. 1976-77 காலத்தில் ரிலையன்ஸ் குழுமம் ஆண்டு விற்றுமுதலாக ரூ.70 கோடியை மட்டுமே கொண்டிருந்தது நினைவுகூரத்தக்கது. அத்துடன் திருபாய் வெறும் ரூ.15,000 கொண்டே தனது வணிகத்தைத் தொடங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

2007இல் வெளியான மணிரத்னம் இயக்கத்தில் வந்த குரு திரைப்படம் அம்பானியின் வாழ்க்கையை முன்மாதிரியாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

# யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலய நூற்றாண்டு விழாச் சிறப்பு மலர்-06.07.2012

## MESSAGE FOR CENTURY SPECIAL ARTICAL OF J/ ARALY SARASWATHY MAHA VIDYALAYAM

*I extremely happy to send this blessing message to Araly Maha vidyalayam's Artical that is publish for century special celebration of the school.*

*it is noted that Araly Maha Vidyalayam has founded in 1912 and from its inception up to now continuously provide the better contribution on education Sector to the Araly village. Through the centenary education services its produce Human Resources for village as well as country development.*

*The Araly Saraswathy Maha Vidyalayam was upgraded as a Maha vidyalayam in 1968 and 2011 this was graded as 1C school by Provincial Ministry of Education. The education has ways and means to reach the top of the career ladder of one's life. So, it is identified as a precious asset for the human being. This fact is always realized by everyone. This is a prime course that I give the more important to develop the Education sector with Physical and Human Recourses in Northern Province.*

*As the Governor, Nothern Province I am much honoured and take pleasure to note that Araly Saraswathy Maha Vidyalayam celebrates 100 years of education service in the Northern Province in which a school Magazine is published to remark this occasion.*

*I congraculated the Principal, Staff, Students, Parents and wellwishers for all their efforts and wish them the very best.*

***Mr.GA Chandrasiri***
***(Governor, Northern Province)***

## வடமாகாண ஆளுநரின் செயலாளரின் வாழ்த்துச் செய்தி

அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் தனது நூற்றாண்டு கால கல்விப் பணியைப் பூர்த்தி செய்து அதை நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடும் இந்த வேளையில் அதைப்பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

சுதந்திரத்திற்கு முன்பே பல பாடசாலைகள் சுய உதவிப் பாடசாலைகளாக அதாவது கிராமமக்களால் ஆரம்பிக்கப்பட்டு, வளர்ச்சி பெற்று இன்று அரச பாடசாலைகளாக நூற்றாண்டு பூர்த்தியைக் கொண்டாடுவதை காணக்கூடியதாக உள்ளது. இந்தவகையில் அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்தின் சேவையும் பாராட்டத்தக்கதாகும்.

கடந்த நூற்றாண்டு காலமாக இக் கல்விக்கூடத்தின் வளர்ச்சிக்காக உழைத்த அனைத்து உள்ளங்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறுவது எமது கடமையாகும். அத்துடன் நூற்றாண்டு விழாக்காணும் இச்சந்தர்ப்பத்தில் பாடசாலையை வழிநடத்தும் அதிபர், ஆசிரியர் மற்றும் கல்விச் சமூகம், பயிலும் மாணவர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் எதிர்காலத்திலும் இப்பாடசாலை சிறப்பான கல்விப்பணியாற்ற எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. இ. இளங்கோவன்
ஆளுநரின் செயலாளர், வடமாகாணம்.

## அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவரின் ஆசிச்செய்தி

நூற்றாண்டு அகவையில் தடம் பதித்திருக்கும் யாழ்.அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமானது விலைமதிப்பில்லாத செல்வமாகிய கல்விச் செல்வத்தை எதிர்காலத் தலைவர்களாகிய இன்றைய மாணவர் சமுதாயத்திற்கு வாரி வழங்குவதோடு மட்டுமல்லாது நற்பிரஜைகளை உருவாக்குவதன்மூலம் சிறந்ததொரு எதிர்காலத்தைக் கட்டி எழுப்புவதில் பெரும்பங்களிப்பு வுகித்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது..

அராலி பிரதேசமக்களின் கல்விக் கோயிலாகத் திகழும் இவ்வித்தியாலயம் இப்பிரதேச மக்களின் நன்மதிப்பைப் பெற்ற பாடசாலையாகத் திகழ்வதோடு உன்னத பண்புகளும் உயர்ந்த அறிவியல் பலமும் கொண்ட பலரை உருவாக்கியுள்ளது என்றால் அது மிகையாகாது.

நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காகத் தம்மை அர்ப்பணித்த அதிபர், ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டுவதோடு இந்நூற்றாண்டு விழா சிறப்புறவும் இனிதே இடம்பெறவும் கௌரி அம்பாள் சமேத திருக்கேதீஸ்வரநாதனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

"கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக"
திரு. விசுவநாதர் கையிலாசபிள்ளை
(பழையமாணவர்)
தலைவர்,
அகில இலங்கை இந்து மாமன்றம்,
வித்தியாலய பழைய மாணவர் சங்கம், கொழும்பு கிளை.



## யா/ அராலி சரஸ்வதி மகாவித்தியாலய வரலாறு

1912-2012

ஈழவள திருநாட்டிலே வடபால் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் யாழ்ப்பாண பூமியிலே அராலிக் கிராமத்திலே 1912 ஆம் ஆண்டு அறிஞர் பெருமக்களால் ஆரம்பிக்கப்பட்ட வித்தியாலயமே இதுவாகும். ஆரம்பத்தில் ஆரம்பப் பாடசாலையாகவும் பின்னர் 1937 இல் உயர்தரப் சிரேஷ்ட அந்தஸ்தையும் 1939இல் உயர்தர கனிஷ்ட அந்தஸ்தையும் பெற்று 1968 ஆம் ஆண்டு மகாவித்தியாலயமாகத் தரம் உயர்ந்து இன்றைய நூற்றாண்டு விழாக்காலத்தில் க.பொ.த உயர்தர கலைப்பிரிவு வகுப்புக்களும் தொடக்கப்பட்டு தரம் 1C பாடசாலையாகத் தரம் உயர்ந்து நிற்கின்றது.

வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு காலம் காலம் வரும் உயர் அதிபர்களும், மாண்புமிகு இலங்கை அரசின் அரச அதிகாரிகளும், பழையமாணவர் சங்கத்தினரும், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினரும், ஆசிரியர்களும், பெற்றோர்களும் நலன் விரும்பிகளும் அரும்பெரும் தொண்டாற்றி வருகின்றார்கள். வித்தியாலயத்தின் ஆரம்ப வளர்ச்சிகளில் அராலி சரஸ்வதி மகாசபையும், அராலி வாணிவிலாச சபையும், அராலி கிராமசபையும் அளப்பெரும் தொண்டாற்றி வந்துள்ளன.

வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காகப் பாடுபட்ட அதிபர்களின் வரிசையில் அமரர்.மு.சதாசிவம், உயர்திரு. மு.பத்மநாபன், உயர் திருமதி சோ.அம்பலவாணர் , உயர்திரு மா. சோமசேகரம் முதலிய பெருந்தகைகள் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். அதிபர். மு.சதாசிவம் அவர்களின் காலத்தில் வித்தியாலயம் உயர்தர சிரேஷ்ட அந்தஸ்தைப்பெற்றதோடு மகா வித்தியாலயம் ஆகவும் தரம் உயர்ந்தது. தற்போதைய அதிபர் உயர் திரு மா.சோமசேகரம் அவர்களின் பெருமுயற்சியால் வித்தியாலயம் ஈட்டிவரும் சாதனைகள் அளப்பரியன. வலைப்பந்தாட்ட அணியினர் (15,17வயதுப் பிரிவினர்) இவ்வாண்டு தேசிய மட்டத்திற்கு தெரிவாகிச்செல்வது நூற்றாண்டு விழாக்காலத்தில் வித்தியாலயத்திற்கு கிடைத்த பெரு வெற்றியாகும்.

வளர்ச்சி அடைந்து வரும் வித்தியாலயம் மென்மேலும் வளர்ச்சி அடைந்து நூறுபோல் நூறாயிரம் ஆண்டுகள் கண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக.

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

கிராமத்துப் பல்கலைக்கழகம் வாழ்க

அராலி சரஸ்வதி அன்னைக்கு அகவைநூறு. இந்நூற்றாண்டு காலப்பகுதியில் தன்னையும் தன் அருள் வேண்டி வந்தவர்களையும் வாழவைத்த அன்னையவள் இன்றும் நின்று நிலைத்த நீடித்த புகழுடன் மிளிர்கின்றாள்.

ஒருசிறந்த கலைக்கோயிலுக்கான கட்டமைப்புக்கள் பல இவ்வித்தியாலயத்தில் உள்ளன. பிரதான வீதியில் அழகான நுழைவாயில் உட்புறத்தில் அழகிய உருவச் சிலை, நன்கு பராமரிக்கப்படும் சுற்றாடல், ஆங்காங்கே திட்டமிட்டு அமைக்கப்பட்ட கட்டடங்கள் , ஆய்வுகூடங்கள், நூலகவசதிகள், விளையாட்டு மைதானம் எனப் பௌதிகவளங்கள் சேர்ந்துள்ளன.

கல்விசார் நலன்களைப் பூர்த்தி செய்யும் பாடசாலையாக இது மிளிர்கிறது. ஆரம்பப்பாடசாலை, இடைநிலைப் பாடசாலை எனத் தரம் உயர்த்தப்பட்ட இவ்வித்தியாலயம் இன்று க.பொ.த உயர்தரக் கலைப்பிரிவுடன் திகழ்கிறது. விரைவில் உயர்தர வர்த்தக மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளும் தென்படுகின்றன.

அராலி சரஸ்வதி அன்னையவள் நூற்றாண்டு விழாக் காணும் இந்நாளில் அவளை வாழ்த்தும் நல்ல உள்ளங்கள் பல்லாயிரம் பேருடன் நானும் இணைந்து கொள்கின்றேன். அராலி என்ற கிராமம் நிலைத்திருக்கும் வரை இம் மகாவித்தியாலயத்தின் பேரும் புகழும் நிலைத்திருக்குமெனத் திடமாக நம்பலாம்.

திரு. ஆ. ராஜேந்திரன்
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலிகாம கல்வி வலயம் , மருதனார்மடம்.

(சி-399)

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

கல்விசார் பெருந்தகையீர்!

யாழ்ப்பாணம் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் இன்று தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். கல்விப் பாரம்பரியத்தை வளர்த்தெடுக்கும் வகையில் கல்விக்குத் தலைவியாக இருக்கும் சரஸ்வதியின் பெயரினால் நூறு ஆண்டுகள் அராலி மக்களின் கல்வி வளர்ச்சிக்கு நிறைவான பணியாற்றி இன்று தலை நிமிர்ந்து நிற்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. கல்வியே கண்ணெனும் வகையில் கல்வியில் லாதவனுடைய வாழ்க்கை இருட்டறையில் இருப்பதைப் போன்று எல்லோருக்கும் கல்வி என்ற வகையில் ஒழுக்கமும் சமயநெறிகளும் மாணவரிடையே வளர்தெடுக்கும் நோக்கில் தோற்றம் பெற்றதான இப்பாடசாலையினுடைய பணி மகத்தானது.

தமிழனின் தலையாய சொத்து கல்வி ஆகும். இப்பணியை நூறு ஆண்டுகள் இப்பாட்சாலையூடாக வளர்த்தெடுத்த அதிபர், ஆசிரியர் அனைவரும் போற்றுதற்குரியவர்கள். இப்பாடசாலை இன்னும் பல்லாண்டுகாலம் கல்விப் பணியும் ஏனைய துறைகளிலும் வளர்ச்சியடைந்து நற்சமூகத்தை உருவாக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். இப் புனித பணியில் இணைந்திருக்கும் அன்பு உள்ளங்களை வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

வாழ்க பாடசாலை ,வளர்க கல்விப்பணி

என்றும் வேண்டும் இன்ப அன்பு
ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த
பரமாச்சாரிய சுவாமிகள்
இரண்டாம் குருமஹாசந்நிதானம்
நல்லை ஆதீனம்.

## வித்தியாலய அதிபரின் ஆசிச் செய்தி

யா/அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக 1912 ஆம் ஆண்டு கல்விசார் பெருந்தகைகளின் பெருமுயற்சியினால் இரண்டு பரப்பு காணியில் சரஸ்வதி வித்தியாசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு 1968 ஆம் ஆண்டு மகா வித்தியாலயம் தரம் பெற்று இன்று 1C பாடசாலையாக தரம் உயர்ந்து நிற்கின்றது.

இப்பாடசாலை இன்று இந்த நிலை அடைவதற்கு இதற்கு முன் சேவையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர். அன்று அவர்கள் இந்தப் பாடசாலைக்காக இந்தக் காணிகளை எத்தனையோ பிரச்சினைகளை எதிர்கொண்டு தேடியபடியினாலேயே இன்று இப்பாடசாலை இக்கட்டடங்களையும் மைதானத்தையும் கொண்ட ஒரு 1C பாடசாலையாகத் தரம் உயர்வதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

இப்பாடசாலை அதிபர் உயர் திரு மு.சதாசிவம் அவர்களின் காலத்திலிருந்தே பெரிய கல்விமான்களை உருவாக்கிக் கொண்டு வருகின்றது. இன்று யா/ அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் கல்வித்துறையிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் வலயமட்ட, மாவட்டமட்ட, மாகாணமட்டத்திலும் சாதனைகள் புரிந்துள்ளது. இன்று இந்தப் பாடசாலை பெரு வளர்ச்சி அடைவதற்கு இங்குள்ள ஆசிரியர்களின் பங்களிப்பே மிகப்பெரிய வெற்றியாகும். இப்பாடசாலை மாணவர்கள் கணித, விஞ்ஞான பாடத்திலும் மட்டுமன்றி ஆங்கில பாடத்திலும் க.பொ.த (சாதாரணம்) தரத்தில் 50% சித்தியைப் பெற்றுள்ளனர். அத்துடன் இப்பாடசாலையின் வளர்ச்சியில் பாடசாலையின் பழைய மாணவர்கள் சங்கம் பெரும்பங்காற்றியுள்ளது. இப் பாடசாலையின் பழைய மாணவர் திரு.செ. சிவகுரு உதவிக் கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் பெருமுயற்சியினால் 90'X25' கட்டடம் 2006 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. இப்பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக்கிளை பெரும் உதவி புரிந்துள்ளது. குறிப்பாக திரு.திருமதி. கையிலாசபிள்ளை அவர்கள் இருவரும் ஒரு மனதுடன் இப்பாடசாலைக்குப் பேருதவிகள் புரிந்துள்ளனர்.

பணத்தேவையோ, கட்டடத்தேவையோ எதுவாக இருந்தாலும் அவர்கள் மனம்சலிக்காமல் உதவி செய்துள்ளார்கள். இன்றும் மாணவர்களின் வகுப்பறை பற்றாக்குறைக்காக இரண்டு மாடிக்கட்டடம் ஒன்று கட்டித்தருகிறார்கள். அத்துடன் திருவாளர் க.புண்ணியமூர்த்தி அவர்களும் அன்றும் இன்றும் பாடசாலைக்காகப் பேருதவிகள் புரிந்துள்ளார். இவ்வாறு எல்லோரினதும் ஆசியுடன் 1C பாடசாலையாக தரம் உயர்ந்து நிற்கும் பாடசாலை 1AB பாடசாலையாக மாறி இக்கிராமத்திற்கு சிறந்த கல்விப்பணியை ஆற்ற வேண்டும் என்று கல்வித்தாயை வேண்டி இப் பாடசாலையில் கல்வி கற்று இப்பாடசாலையின் அதிபராகக் கடமை செய்ய வாய்ப்புத் தந்த இறைவனுக்கு நன்றி கூறி இப்பாடசாலை நூற்றாண்டு விழா இனிதே சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றேன்.

உயர்திரு. மாரிமுத்து சோமசேகரம்-SLPS II-I
(அதிபர், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்.)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 179

## பெர்லினின் வீழ்ச்சியும் பாசிச ஜேர்மனி நிபந்தனையின்றி சரணடைதலும்



பாட்ஸ்டாம் மகாநாட்டில் கலந்து கொண்ட ஹாரி. எஸ். ட்ருமன்




பாட்ஸ்டாம் மகாநாட்டில் கலந்துகொண்ட ட்ருமன், ஸ்டாலின் மற்றும் ஏனைய அரசாங்கத் தலைவர்கள்

**பாட்ஸ்டாம்** மகாநாட்டில் போர் நஷ்ட ஈட்டைப் பற்றிய முக்கியப் பிரச்சினை தீர்க்கப்பட்டது. நான்கு வல்லரசுகளும் தாம் பிடித்துள்ள பிரதேசங்களிலிருந்தும் அயல் நாடுகளில் உள்ள ஜேர்மனிய முதலீடுகளிலிருந்தும் போர் நஷ்ட ஈட்டைப் பெறவேண்டியிருந்தது. சோவியத் யூனியன் இதற்குக் கூடுதலாக மேற்குப் பிரதேசங்களிலிருந்து பெறப்படும் தொழிற்துறை உபகரணங்களின் மொத்தத்தில் இன்னமும் 25 சதவிகிதத்தைப் பெற வேண்டியிருந்தது. இதில் 15 சதவிகிதம் நிலக்கரி, உணவுப் பொருட்கள் மற்றப் பொருட்களின் சமமான சப்ளைக்கு மாற்றாகப்பெற வேண்டியிருந்தது. தான் போர் நஷ்ட ஈடாகப் பெற்றதிலிருந்து சோவியத் யூனியன் போலந்தின் போர் நஷ்ட ஈட்டு கோரிக்கைகளைப் பூர்த்தி செய்தது. சோவியத் தூதுக் குழுவின் முன்மொழிவின் பேரில் ஜேர்மனியின் இராணுவ மற்றும் வர்த்தகக் கப்பல்களைச் சமமான அளவில் சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு இடையில் பிரித்துக் கொள்வது என்றும் நீர்மூழ்கிக் கப்பல்களை மூழ்கடிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

சோவியத் தூதுக்குழு மேற்கொண்ட உறுதியான நிலை, மக்கள் ஜனநாயக போலந்து அரசாங்கத்தில் பிற்போக்குச் சக்திகளைச் சேர்த்துக் கொள்வதன்மூலம் இதை விரிவு படுத்தவேண்டும் என்ற கோரிக்கை உட்பட பல கோரிக்கைகளைப் போலந்தின் மீது திணிக்க அமெரிக்காவும் பிரிட்டனும் மேற்கொண்ட முயற்சிகளைப் பலிக்காது போகுமாறு செய்தது. மேலும் மத்திய, தென் கிழக்கு, ஐரோப்பிய நாடுகளின் மக்கள் ஜனநாயக சமூக அமைப்பிற்கு எதிராக இந்நாடுகளின் உள்விவகாரங்களில் நேரடியாகத் தலையிடும் முடிவுகளை மகாநாட்டின் மீது திணிக்கச் செய்த முயற்சிகளும் பலிக்கவில்லை.

இம்மகாநாட்டின் அறிக்கையில் 3-வது பிரிவில் பின்வருமாறு கூறப்பட்டிருந்தது.

நேசநாட்டு இராணுவங்கள் ஜேர்மனி முழுவதையும் ஆக்கிரமித்துள்ளன. ஜேர்மனிய மக்கள் யாருடைய வெற்றிகளின் போது அவர்களுக்கு வெளிப்படையாக ஆதரவு நல்கி கண்மூடித்தனமாக கீழ்படிந்து நடந்தார்களோ அவர்களின் தலைமையில் இழைக்கப்பட்ட பயங்கரமான குற்றங்களுக்குப் பரிகாரம் தேடத் தொடங்கியுள்ளார்கள்.




சோவியத் யூனியன், அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன் ஆகிய அரசாங்கங்களின் தலைவர்கள் கலந்து கொண்ட பாட்ஸ்டாம் மகாநாடு 1945- ஜுலை- 17

### பாசிச ஜேர்மனியின் முறியடிப்பு முற்றுப்பெறுதல்

நேச நாட்டவரின் கண்காணிப்பின் போது வெற்றி கொள்ளப்பட்ட ஜேர்மனியின் விடயத்தில் நேச நாட்டவரின் ஒத்தியைந்த கொள்கையின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கோட்பாடு பற்றி மகாநாட்டில் உடன்பாடு அடையப்பட்டது.

ஜேர்மனியைப் பற்றிய கிரீமிய உடன்படிக்கையை நிறைவேற்றுவதுதான் இந்த உடன்படிக்கையின் நோக்கமாகும். ஜேர்மனிய இராணுவ வெறியும் நாசிசமும் வேரறுக்கப்படும். நேசநாட்டினர் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு இன்றும் எதிர்காலத்திலும் ஜேர்மனி என்றென்றும் அண்டை நாடுகளுக்கோ உலக அமைதிக்கோ அச்சுறுத்தலை ஏற்படுத்தாது இருப்பதற்காக மற்ற நடவடிக்கைகளையும் மேற்கொள்வார்கள்.

ஜேர்மனிய மக்களை ஒழித்துக் கட்டும் நோக்கமோ அடிமைப்படுத்தும் எண்ணமோ நேச நாட்டினருக்குக் கிடையாது. ஜனநாயக, சமாதான அடிப்படையில் ஜேர்மனிய மக்கள் தமது வாழ்க்கையை மேற்கொண்டு மாற்றியமைப்பதற்குத் தயார்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை ஜேர்மனிய மக்களுக்கு அளிப்பதுதான் நேச நாட்டவரின் எண்ணமாகும். இந்த நோக்கத்தை அடைவதன் மீது ஜேர்மனிய மக்களின் சொந்த முயற்சிகள் இடையறாது திருப்பப்படுமானால் இம்மக்களால் காலப்போக்கில் உலகின் சுதந்திரமான, சமாதானமான மக்களின் மத்தியில் இடம்பிடிக்க முடியும்.



வெற்றியை கௌரவிக்கும் முகமாக மாஸ்கோவில் அணிவகுப்பில் ஈடுபடும் வீரர்கள் 1945 ஜுன் -24

இவ்வாறாக பாட்ஸ்டாம் மகாநாட்டில் கடும் வர்க்கப் போராட்டச் சூழ்நிலைகளில் நடைபெற்ற விவாதங்களும் முடிவுகள் ஏற்கப்பட்டதும் இறுதியில் சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் வெற்றியில் முடிவடைந்தன. இக்கொள்கை மக்களின் ஆழ்ந்த மதிப்பைப் பெற்றது, சர்வதேச அரங்கில் சோவியத் யூனியனின் செல்வாக்கு வளர்ந்து வலுவடைய உதவியது.



வெற்றியை கௌரவிக்கும் முகமாக மாஸ்கோவில் அணிவகுப்பில் ஈடுபடும் வீரர்கள் 1945 ஜுன் -24

**நியூரெம்பர்க் விசாரணை**

அமெரிக்க, பிரிட்டிஷ் பிற்போக்கு ஆளும் வட்டங்கள் யுத்தம் நடந்து கொண்டிருந்தபோதே பாசிச சதியாளர்களின் மீது நீதி விசாரணை நடக்காதிருக்குமாறு செய்வதை நோக்கமாகக் கொண்ட பரவலான பிரசாரத்தை தொடக்கின.

நெப்போலியனை வெற்றி கொண்ட அரசுகள் நீதி விசாரணை ஏதுமின்றியே நெப்போலியனுக்கு ஆயுள் தண்டனை அளித்த செயின்ட யெனா தீவிற்கு அனுப்பியதைப் போன்றே ஹிட்லரின் விடயத்திலும் நடந்துகொள்ள வேண்டுமென்ற ஆலோசனை பத்திரிகையில் விவாதிக்கப்பட்டது. பாசிச கொலை பாதகர்களின் குற்றம் விவாதத்திற்கு அப்பாற்பட்டது என்றாலும் குற்றங்களை நிரூபிப்பதற்கு சான்றுகளைத் தேட ஏராளமான நேரத்தையும் சக்தியையும் செலவிட வேண்டி வரும் என்ற கருத்து இத்தகைய தொரு முடிவின் முக்கிய வாதமாக முன்வைக்கப்பட்டது.

ட்ருமனின் சாட்சியப்படி, சர்ச்சில் 1943 ஆம் ஆண்டு அக்டோபரிலேயே, பிரதான போர்க் குற்றவாளிகளை விசாரணை ஏதுமின்றி சுட்டுக் கொல்ல வேண்டும் என்று சோவியத் அரசாங்கத் தலைவரை நம்பவைக்க முயன்றார்.

பாசிச ஜேர்மனியின் பலமான இராணுவ இயந்திரத்தைத் தோற்றுவிப்பதில் ஹிட்லருக்குத் தாம் செய்த உதவியும் சோவியத்யூனியனின் மீது தாக்குதலைத் தொடுக்குமாறு தூண்டிவிட்டதும் அம்பலப்படுத்தப்பட்டு விடுமோ என்று மேலைய வல்லரசுகள் அஞ்சியதுதான் இத்தகைய ஆலோசனைகளின் முக்கிய காரணமாகும்.

(தொடரும்)

# வவுனிக்குளத்தை அண்டிய நெற்பயிர் செய்கைகள் பாதிக்கப்படமாட்டாது

## கமக்கார அமைப்பினர் தெரிவிப்பு

(மல்லாவி)

வவுனிக்குளத்தின் கீழ் இம்முறை ஆயிரத்து 215 ஏக்கர் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தற்போது குளத்தின் நீர் மட்டம் 12 அடி உள்ளது எனவும் நீர்த்தட்டுப்பாடு ஏற்படாது என்றும் இப்பகுதி கமக்கார அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறுபோக செய்கையின் போது விவசாயிகள் மற்றும் நீர்ப்பாசன திணைக்கள பொறியிலாளர்கள் உத்தியோகத்தர்களது திட்டமிடலும் அர்ப்பணிப்புடனான ஒத்துழைப்புமே காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனிக்குளத்தின் பிரதான கால்வாய்கள் மற்றும் குளத்தின் சில பகுதிகள் பல மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

தற்போது மீள்குடியேறிய மக்களின் நலன் கருதி ஆயிரத்து 215 ஏக்கர் சிறுபோக நெற்செய்கைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

சிறுபோக நெற்செய்கையின் அறுவடை முடிவடைந்ததும் வவுனிக்குள நீரைப் பயன்படுத்தி புகழேந்தி நகர் கிராமத்தில் செயற்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஏற்ற நீர்ப்பாசன வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

தற்போது பரீட்சார்த்த நீர்ப்பாய்ச்சும் வேலைகள் நடைபெறவுள்ளதுடன் தொடர்ச்சியாக மேட்டு நீர்ப்பாசனத்திற்குரிய நீர் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-3-15)

# நிதி மோசடிகளுடன் தொடர்புடைய 15 இலட்சம் பேர் கறுப்புப் பட்டியலில்

(கொழும்பு)

இலங்கையில் நிதி மோசடி சம்பவங்களுடன் தொடர்புடைய 15 இலட்சம் பேர் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பல்வேறு நிதி மோசடிகளில் ஈடுபட்டு மீளவும் அவ்வாறான கொடுக்கல்-வாங்கல்களில் ஈடுபட முடியாதவாறு இவர்கள் கறுப்புப்பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர்.

வங்கிக் கடன், கடன் அட்டை, வாகன குத்தகை பணம் போன்றவற்றை உரிய முறையில் செலுத்தாது மோசடி செய்தவர்களின் பட்டியல் இவ்வாறு கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளது.

கடன் அட்டை மோசடியில் ஈடுபட்ட ஐந்து இலட்சம் பேர் கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளனர். நிதி மோசடி தொடர்பில் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளில் அதிகமானவை கடன் அட்டை மோசடிகள் தொடர்பானவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள பலர் கடன் பெற்றுக்கொள்வதற்காக பிணை கையொப்பமிட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கறுப்புப் பட்டியல் இடப்பட்டவர்கள் வேறும் நிறுவனங்களில் கடன் பெற்றுக்கொள்ள முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கிழக்கில் சத்துணவு வழங்கும் திட்டம் கேள்விக்குறி

(மட்டக்களப்பு)

நாடெங்கும் பாடசாலைகள் தோறும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் மாணவர்களுக்கான சத்துணவு வழங்கும் திட்டமானது கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு வழங்குவதில் கேள்விக் குறியாகவுள்ளது.

கடந்த மார்ச் மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரைக்குமான காலப்பகுதிக்குரிய சத்துணவு வழங்கும் திட்டத்திற்கான பணத்தினை இதுவரை மட்டக்களப்பிலுள்ள பல பாடசாலைகளுக்கு வழங்கப்படவில்லை.

மேற்படி பணத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்கு வழங்கி விட்டதாக அதிகாரிகளினால் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இதுவரைக்கும் மாகாண கல்வி திணைக்களம் இது தொடர்பான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை.

இவ்விடயம் தொடர்பாக பாடசாலை அதிபர்கள், வர்த்தகர்களுக்கு பணம் கொடுக்க முடியாமல் பல சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

மேற்படி நிலைமைக்கு கிழக்கு மாகாண கல்வி திணைக்களம் தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என சகலரும் வேண்டுகோள் விடுக்கின்றனர். (அ-2)

# தேர்தலில் கட்சி சின்னங்களை பயன்படுத்த சில விதிமுறைகள்

## தேர்தல் ஆணையாளர் தகவல்

தேர்தலில் எதிர்வரும் காலங்களில் புலி மற்றும் நாய் ஆகியவற்றை கட்சி சின்னங்களாக பயன்படுத்த முடியாது என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதற்கு முன்னர் சில கட்சிகள் தமது சின்னமாக புலி மற்றும் நாய் ஆகியவற்றை பயன்படுத்தியிருந்தனர்.

விசேட சந்தர்ப்பமாக கருதி எதிர்வரும் காலங்களில் குறித்த இரண்டு சின்னங்களையும் தடை செய்யத் தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு மேலதிகமாக கலசம், ஜோடி வாள், தாமரை மலர், சிங்கம், சம்மட்டி போன்றவற்றையும் கட்சி சின்னமாக பயன்படுத்த அனுமதிக்க முடியாது.

இதேவேளை இம்முறை மாகாணசபைத் தேர்தல் நடைபெறும் காலப்பகுதியில் உயர்தரப் பரீட்சை நடைபெறவுள்ளமையினால் பிரசார நடவடிக்கைகள் தொடர்பில் சில க்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.


பரீட்சை நிலையங்களுக்கு அருகாமையில் ஒலி வாங்கிகளைப் பயன்படுத்தி பிரசாரம் செய்யக்கூடாது என்றும் குறிப்பிட்டார். (அ-2)

## கணித்தல் திறன்போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ். வலயத்திற்குட்பட்ட கோட்டங்களுக்கான ஆரம்பக்கல்விச் செயற்பாடு கணித்தல் திறன் போட்டி எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

இதற்கமைய யாழ்ப்பாணக்கோட்டப் போட்டிகள் யா/ சென். மேரிஸ் மகா வித்தியாலயத்திலும் நல்லூர் கோட்டப் போட்டிகள் யா/ இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையிலும் கோப்பாய் கோட்டப்போட்டிகள் யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் நடைபெறும். இப்போட்டியில் போட்டியாளர்களை பொறுப்பாசிரியருடன் அனுப்பிவைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (அ-9)





ஐக்கிய அமெரிக்காவின் 236 ஆவது சுதந்திரதினம் நேற்று முன்தினம் கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் விருந்துபசார நிகழ்வொன்று இடம்பெற்றது. இந்நிகழ்வின் போது....

# கிழக்குத்தேர்தலில் சகல கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## தமிழர் விடுதலைக்கூட்டணி அறிக்கை

நாட்டு நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைந்து வருவதுடன் தமிழ் மக்களது உரிமைகளும் சகல விதத்திலும் பறிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்கு முறைகளும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கிழக்கு மாகாண சபையை கலைத்து தேர்தலை நடத்த அரசு உள்நோக்கத்துடன் அவசர அவசரமாக முடிவு செய்துள்ளது.

எனவே இத்தேர்தலில் சகல கட்சிகளும் ஒன்றுபட்டு தேர்தலை எதிர்கொண்டு அரசின் கைக்கு சிக்காமல் கிழக்கு மாகாண சபையை கைப்பற்ற வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் தமிழர் விடுதலைக்கூட்டணி செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

முறிகண்டியில் நடந்த காணி அபகரிப்பு மற்றும் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் போன்றவை நாம் எதிர்கொள்ளும் ஆபத்துக்களையும் தமிழ் மக்களுக்கு விடுக்கப்படும் எச்சரிக்கையுமாகும்.

தமிழ் மக்களது காணிகளை கையகப்படுத்தி சொந்த நிலங்களில் இருந்து விரட்டியடித்து நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

நீண்ட கால யுத்தத்தால் இழப்புக்களையும் சொல்லொணா துயரங்களையும் சந்தித்து தமது சொந்தக் காணிகளில் மீளக்குடியேற வந்த முறிகண்டி மக்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலையும் நடத்தியமை கண்டிக்கத்தக்கது.

இதில் குழந்தைகள், சிறுவர்கள், வயோதிபர்கள், பெண்கள் என பலதரப்பட்டவர்களும் வயது வேறுபாடின்றி தாக்குதலுக்குள்ளானது மிலேச்சத்தனமான செயலாகும்.

இந்த நிலையை தொடரவிடாது பாதுகாக்க வேண்டிய கடமை சகல கட்சிகளுக்கும் உண்டு. முதல்படியாக இத்தேர்தலை தமிழ் மக்களது ஒன்றுபட்ட சக்தியை வெளிப்படுத்தி கிழக்கு மாகாண சபையை வெற்றிகொள்ள வேண்டும் என்றுள்ளது. (எ-8)

## கணிதபாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு 12 ஆம் திகதி


(பூந்தோட்டம்)

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் கணித பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கணித செயற்பாடுகள், செயற்பாட்டுக் கருவிகள் தயாரித்தல் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 8 மணி முதல் 2.30 மணி வரை நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய கணித அறையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் கணிதம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ. அன்ரன் சோமராஜா கேட்டுள்ளார். (அ-266)

# தமிழினம் அடிமைப்பட்ட இனமாக இருப்பது வேதனை தருகின்றது

## சிறைக்கைதிகள் தாக்கப்பட்டமை குறித்து சீமான் அறிக்கை



(கொழும்பு)

**இலங்கைச் சிறைச்சாலை ஒன்றில் இன்னமும் அடைத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் சிலரை பணயக் கைதிகளாக பிடிக்க வந்த இலங்கை இராணுவத்தினரை எதிர்த்த தமிழர்கள் மீது கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதை நாம் தமிழர் கட்சி வன்மையாக கண்டிக்கிறது.**

சிறையில் இருந்த இரண்டு பேரை விசாரணை என்ற பெயரில் இலங்கை இராணுவம் பிடித்துச் சென்று அநுராதபுரம் சிறையில் அடைத்துள்ளது. இதனை எதிர்த்து சிறைச்சாலையில் இருந்த தமிழர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அதில் ஈடுபட்ட மூன்று பேரை பிடிக்க வந்த இராணுவத்தினரை மற்றவர்கள் கடுமையாக எதிர்த்துள்ளனர்.

அவர்கள் மீது கொடூரமாக தாக்குதல் நடத்திய இலங்கை இராணுவத்தினர் 185 பேரை பிடித்து சென்று அநுராதபுரம் கொண்டு சென்றுள்ளனர். அநுராதபுரம் சிறைக்குக் கொண்டு சென்ற தமிழர்களை அங்கிருக்கும் சிறை கண்காணிப்பாளர் தனது காலில் விழுந்து வணங்குமாறு வற்புறுத்தியுள்ளார். அதனை எதிர்த்தவர்களை பொல்லுக்கட்டைகள் சகிதம் கடுமையாக தாக்கியுள்ளனர்.

ஏற்கனவே அங்கு சிறைப்பட்டிருந்த 35 அரசியல் கைதிகள் மீதும் கடுமையாக தாக்குதல் நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் 22 அரசியல் கைதிகள் பலத்த காயமுற்றுள்ளனர்.

காயப்பட்டவர்களக்கு உரிய சிகிச்சை அளிக்காத காரணத்தால் தலையில் கடுமையாக தாக்கப்பட்ட ஒரு அரசியல் கைதி உயிரிழந்துள்ளார்.

மற்றொரு அரசியல் கைதி உணர்வற்ற நிலையில் உள்ளார். காயமுற்ற அரசியல் கைதிகளை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சென்று பார்த்துள்ளார்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு செல்லும் இந்திய அரசின் பிரதிநிதிகள் இதுபற்றியெல்லாம் எந்தக் கேள்வியும் எழுப்பாமல் இலங்கை எங்களது நட்புநாடு என்று தொடர்ந்து பிரகடனம் செய்வதில் மட்டுமே கவனமாக இருக்கின்றனர்.

இலங்கைத்தமிழர்கள் வாழ்வில் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறோம் என்று கூறும் இந்திய மத்திய அரசு, இலங்கை அரசு தமிழர்களுக்கு இழைத்துவரும் கொடுமைகளையெல்லாம் கண்டுகொள்ளாமல் இருந்து வருவதே இன்றளவும் தொடரும் இந்த கொடுமைகளுக்கெல்லாம் காரணமாகும்.

போர் முடிந்த பின்னரும் தமிழின அழிப்பை இலங்கை அரசு தொடர்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இந்த கொடூர சம்பவம் சாட்சியாகும். இதையெல்லாம் தடுத்து நிறுத்தக்கூடிய ஒரு அரசு இல்லாமல் தமிழினம் உலக அளவில் ஒரு அடிமைப்பட்ட இனமாக இருப்பது வேதனையாக இருக்கிறது.

ஐ.நாவும் உலகநாடுகளும் இந்திய மத்திய அரசால் முழுமையாக திசை திருப்பப்படுவதால் ஈழத் தமிழனின் துயரம் தொடர் கதையாகி வருகிறது.

இந்திய அரசு தங்களுக்கு ஒரு நியாயமான அரசியல் தீர்வை சிங்கள இனவாத அரசிடம் இருந்து பெற்றுத்தரும் என்று இன்னமும் நம்பும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இதற்கு மேலாவது யதார்த்த நிலையை உணர்ந்து தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை சர்வதேச அளவில் முன்னெடுக்க வேண்டும் என நாம் தமிழர் கட்சிக்காக சீமான் தெரிவித்திருந்தார். (அ-2)

## பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைகள் நியாயமானவை

### ஜனாதிபதியின் செயலாளர் ஏற்றுக்கொண்டார்

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைகள் நியாயமானவை என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஏற்றுக் கொண்டதாகவும் அவர் தமது கோரிக்கைகளை ஜனாதிபதிக்கு விளக்கவுள்ளதாகவும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்கள் சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் நிர்மல் தேவசிறி கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவுடன் நேற்று முன்தினம் மணித்தியாலமாக நடந்த கலந்துரையாடலின் பின்னர் தேவசிறி இவ்வாறு கூறினார்.

களனி மற்றும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகங்களை தவிர்ந்த ஏனைய பல்கலைக்கழகங்களில் நேற்று முன்தினம் பணிப்பகிஷ்கரிப்பு நடைபெற்றது எனவும் தமது கோரிக்கைகள் ஏற்கப்படும் வரை பகிஷ்கரிப்பு தொடரும் எனவும் அவர் தெரிவித்தார். (அ-2)

## கையாலாகாத கைதிகளை கடுமையாக தாக்கியது அரசு

### மேல்மாகாண சபை உறுப்பினர் குமரகுருபரன் குற்றச்சாட்டு

அரசாங்கமே தமிழ்க் கைதியின் மரணத்திற்கு முழுப்பொறுப்பும் ஏற்க வேண்டும். சிறைச்சாலை பயங்கரவாதத்தின் விளைவே தமிழ் இளைஞனின் மரணம் என ஐக்கிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் மேல் மாகாணசபை உறுப்பினருமான கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார்.

கைதிகள் கோரிக்கையை வைத்துத்தான் பணயம் வைத்தார்களே தவிர யாரையும் தாக்கியதாக தெரிவிக்கப்படவில்லை. எனவே, கையாலாகாத கைதிகளை படுமோசமாக தாக்கியதன் விளைவே கைதிகள் வைத்தியசாலைகளுக்கும் வேறு சிறைச்சாலைகளுக்கும் மாற்றப்பட்டதாகும்.

சட்டத்தரணிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்குதலுக்குள்ளான கைதிகளை பார்வையிட அனுமதியாதது இவர்கள் மோசமாக தாக்கப்பட்டுள்ளனர் என்பதை மறைப்பதற்கான நடவடிக்கையாகவே உள்ளது. சாதாரண் சட்டத்தின் கீழேனும் கொலைகாரர்கள் தண்டிக்கப்பட வேண்டும். சிறைக் காவலர்களின் காவலில் மரணித்ததால் அரசாங்கம் இவர்களது குடும்பத்துக்கு நட்டஈடு வழங்க வேண்டும்.

ஏனைய சிறைக்கைதிகளின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களையும் வழமைபோல் பார்க்க அனுமதிக்க வேண்டும் என்றார். (அ-2)

## பணிப்பகிஷ்கரிப்பை மேற்கொண்ட ஊழியர்களுக்கு எதிராக நடவடிக்கை

### அமைச்சர் சம்பிக்க எச்சரிக்கை

(கொழும்பு)


பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட மின்சார ஊழியர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்ட அனைத்து ஊழியர்களினதும் அன்றைய தினத்திற்கான கொடுப்பனவை இடை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் ஊக்குவிப்பு கொடுப்பனவு உள்ளிட்ட ஏனைய அனைத்து கொடுப்பனவுகளின் போதும் ஊழியர்களின் பணிப்பகிஷ்கரிப்பு நடவடிக்கை பாதிப்பை ஏற்படுத்தும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மின்சார சபை ஊழியர்களின் சம்பளம் 25 வீதத்தால் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டமை நியாயமற்றது. கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து மின்சார ஊழியர்கள் ஆரம்பித்திருந்த பணிபகிஷ்கரிப்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இதேவேளை, தங்களின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு வழங்கப்படாவிட்டால் எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்துவதற்காக மின்சார சபையின் ஒன்றிணைந்த தொழிற்சங்க கூட்டமைப்பின் நடவடிக்கைக் குழு உறுப்பினர் ரஞ்ஜன் ஜயலால் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




வவுனியா குடியிருப்பு சித்திவிநாயகர் ஆலயத்தின் பூங்காவனத் திருவிழாவின் போது சுவாமி வீதி வலம் வருவதை படத்தில் காணலாம்.

(படம்:-பூந்தோட்ட செய்தியாளர்)


# ஈரான், சீனா எனும் இரண்டு காய்கள் ஒரேநேரத்தில் அடித்து வீழ்த்தப்படுமா ?

## திட்டம் தீட்டும் அமெரிக்கா!



இன்றைய நவீன உலகில் படை பலத்தைவிட வலுவானது பொருளாதார வளங்களும், அதன் இருப்பும் தான். எங்கே பொருளாதார பலம் வலுவற்றுப் போகிறதோ அங்கே படைபலமும், வலிமையும் வலு விழந்து போய்விடும். சுலபமாக அந்த நாடு தோற்கடிக்கப்பட்டு விடும். இலங்கையைப் பொறுத்த வரையில் தெற்காசியாவில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் அமைந்துள்ளது. இதன் கேந்திரத் தன்மைதான், இலங்கையில் முப்பதாண்டுகளாகப்போர் நீடித்ததற்கும், இன்றைக்கும் சிக்கல்கள் தீராமல் இருப்பதற்கும் காரணமாக இருக்கிறது. இலங்கைத் தீவு உலகில் வேறு எங்கோ ஒரு மூலையில் இருந்திருக்குமேயானால், உண்மையில் தமிழர்களின் பிரச்சினை எப்போதே தீர்க்கப்பட்டிருக்கும். ஆனால், இந்தியாவின் காலடிக்குள், மேற்கு-கிழக்கு நாடுகளின் பயணப் பாதையில் இது இருப்பதால்தான் இத்தனை சிக்கல்களும் காணப்படுகின்றன.

விடுதலைப்புலிகளை அழிப்பதற்கான போரின் போது மிகத் தந்திரமாக எல்லா வழிகளிலும் உதவிகளை வழங்கத் தொடங்கிய சீனா, மகிந்த ராஜபக்ச அரசாங்கத்துடன் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது. அந்த நெருக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு போருக்குப் பிந்திய முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ளத் தொடங்கியது. அம்பாந்தோட்டையில் விமான நிலையம், துறைமுகம், நுரைச்சோலையில் அனல் மின் நிலையம், கொழும்பு துறைமுக விரிவாக்கம், வீதிகள் அமைப்பு, ரயில் பாதை புனரமைப்பு என்று எல்லா வழிகளிலும் சீன முதலீடுகள் அதிகரித்துள்ளன. சீனா, இலங்கையில் ஒரு இராணுவத் தளத்தை அமைத்துப் பெறக்கூடிய அனுகூலத்தை விட அதிகப்படியாக- இந்த முதலீட்டுத் திட்டங்களின் மூலம் இலங்கையில் தனது இருப்பை உறுதி செய்திருக்கிறது.



ஆரம்பத்தில் சீன முதலீடுகள் தொடர்பான இந்தியாவின் எதிர்ப்பை சமாளிக்க, இந்தியாவுக்கும் சில திட்டங்களை வழங்க முன்வந்தது இலங்கை. அவ்வாறு வழங்கப்பட்டதே சம்பூர், காங்கேசன்துறை, பலாலி மற்றும் வடபகுதி ரயில் பாதை புனரமைப்பு என்பனவாகும்.

இவற்றில் வடபகுதி ரயில் பாதை புனரமைப்புத் திட்டமும், காங்கேசன் துறை துறைமுக அபிவிருத்தித் திட்டமும்தான் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன. ஏனைய திட்டங்கள் இழுபறியிலேயே உள்ளன. முன்னரெல்லாம், சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இலங்கை அரசின் பிரதிநிதிகள், அமைச்சர்கள் மாறிமாறி சமமானளவு சந்தர்ப்பம் கொடுத்து பயணம் மேற்கொண்டனர். இப்போது நிலைமை அப்படியில்லை. இந்தியா பக்கம் இலங்கை அமைச்சர்கள் யாரும் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை.

ஆனால், சீனாவுக்கு கிரமமான பயணங்களை மேற்கொள்ளும் அமைச்சர்கள் உறவுகளை வலுப்படுத்தி வருகின்றனர். மன்னார் கடற்படுகையில் எண்ணெய் அகழ்வுத் துண்டங்கள் அனைத்தையும் இந்தியா தமக்கே தருமாறு கோரியது. ஆனால், அதற்கு இலங்கை இணங்கவில்லை. புதிய கேள்விப் பத்திரங்களைக் கோரும் முடிவில் அரசாங்கம் உள்ளது. இங்கு எண்ணெய் வள ஆய்வில் ஈடுபட ரஷ்யா, வியட்நாம், சீனா போன்ற நாடுகள் கூட ஆர்வத்துடன் உள்ளன. வேறு நாடுகள் கால்வைத்தால், இது தமக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று இந்தியா கருதுவதால் தான் தம்மிடமே தரக்கோரியது.

இந்த நிலையில் அமெரிக்க நிறுவனங்கள் இலங்கையின் எண்ணெய், இயற்கை வள உற்பத்தி மற்றும் சுத்திகரிப்பில் முதலீடு செய்ய ஆர்வம் கொண்டுள்ளதாக புதிய தகவல்கள் வெளியாகியுள்ள-அமெரிக்கத் தூதுவர் பதவியை நிறைவுசெய்துகொண்டு நாடு திரும்பவுள்ள பற்றீசியா புரெனிஸ் இதனைக் கூறியுள்ளார். எண்ணெய் சுத்திகரிப்பு மற்றும் இயற்கை எரிவாயு வளங்களில் முதலிடுவதில் அமெரிக்க நிறுவனங்கள் ஆர்வம் கொண்டுள்ளதாகவும், அடுத்த 5 ஆண்டுகளுக்குள் அமெரிக்க நிறுவனங்களின் முதலீடுகள் அதிகளவில் இடம்பெறும் என்றும் அவர் கூறியுள்ளார். இது இந்தியாவுக்குப் போட்டியாக மன்னார் எண்ணெய் படுகையை அமெரிக்கா குறி வைக்கிறதா என்ற கேள்வியை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், தற்போதைய நிலையில் இந்தியாவுடன் போட்டி போட்டுக்கொள்ளவோ, முட்டிமோதிக் கொள்ளவோ அமெரிக்கா முனையாது. இந்தநிலையில், இலங்கையில் அதிகளவு முதலிடும் அமெரிக்காவின் குறி என்னவென்பதை சுலபமாகவே ஊகிக்க முடிகிறது. அதாவது, இலங்கையுடன் நெருக்கம் காட்டும் சீனாவையும், ஈரானையும் அதனிடம் இருந்து தூரவிலக வைப்பது தான் அமெரிக் காவின் திட்டமாகும்.

சீன முதலீடுகளுக்கு நிகரான முதலீடுகளை மேற்கொள்வதன் மூலம் இலங்கையில் தனது இருப்பை உறுதி செய்து கொள்வதே அமெரிக்காவின் ஒரு திட்டம்.



ஈரானின் எண்ணெய் ஏற்றுமதியையும் இலங் கையுடனான உறவுகளை யும் முடக்குவது அடுத்த திட்டம். சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைத்துக் கொடுத்தது ஈரான்தான். அங்கு ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் எண்ணெயை சுத்திகரிக்க முடியாது. இது தனது எண்ணெய் ஏற்றுமதியை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மேற்கொண்ட தந்திரம். ஈரான் மீதான அமெரிக்காவின் எண்ணெய் ஏற்றுமதித் தடையை அடுத்து, இலங்கையும் அதற்கு இணங்கி எண்ணெய் இறக்குமதியைக் குறைத்தது.

இதனால் அமெரிக்காவின் தடைகளில் இருந்து இலங்கைக்கு அடுத்த ஆறு மாதங்களுக்கு விலக்களிக்கப் பட்டுள்ளது. இந்த நிலையில் ஈரானுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருக்கம் கொஞ்சமும் குறையவில்லை. றியோடிஜெனீரோவில் ஈரானிய ஜனாதிபதிக்கும் இலங்கை ஜனாதிபதிக்கும் இடையில் நடந்த சந்திப்பின்போது, வெளியிடப்பட்ட கருத்துகள் இதனை எடுத்துக் காட்டுகின்றன.

இருநாடுகளும் இணைந்து புதிய உலக ஒழுங்கை உருவாக்கப்போவதாக கூறியதும், மேற்கு நாடுகளைத் திமிர்பிடித்த நாடுகள் என்று வர்ணித்ததும், அமெரிக்காவுக்கு எத்தகைய உணர்வை ஏற்படுத்தியிருக்கும் என்பதை சொல்லிக்கொள்ளத் தேவையில்லை. ஈரானை எண்ணெய் வளத் துறையில் இருந்து அகற்றுவதற்கு ஒரேவழி, அமெரிக்க நிறுவனங்களை முதலிடச் செய்வதுதான் என்று அமெரிக்கா புரிந்துகொண்டுள்ளது.

ஒரு பக்கத்தில் இந்திய எண்ணெய் நிறுவனத்தை திருகோணமலையில் இருந்து அகற்றும் முயற்சிகளில் இலங்கை ஈடுபட்டுள்ள அதே வேளை, அமெரிக்கா இதற்குள் நுழைய முனைகிறது. ஆக, மொத்தத்தில் இலங்கையில் பொருளாதார முதலீட்டுப்போர் ஒன்று உருவாகி வருகிறது. இதன் அடிப்படை நோக்கம் வெறுமனே பொருளாதார நலன்களை அடைவது மட்டும் அல்ல. இலங்கை மீதான ஆதிக்கத் தை உறுதிப்படுத்திக் கொள்வதும்தான்.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகள் மேலும் பலமடைந்து கொண்டிருக்கின்ற சூழலில், இந்தியாவுடனான நெருக்கம் குறைந்து வருகிறது. இதைச் சரி செய்வதற்கும், இலங்கையின் போக்கு தொடர்பாக கவலையை வெளிப்படுத்தவுமே இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் கடந்த வாரம் கொழும்பு வந்திருந்தார். இலங்கையில் மேற்கொள்ளும் திட்டங்களில் இருந்து மெல்லமெல்ல இந்தியா வெட்டி விடப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் தான் அவரது பயணம் இடம்பெற்றிருந்தது.

பலாலி விமான நிலைய அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள இந்தியா இணங்கியிருந்தது. கடைசியாக அதிலிருந்தும் கழற்றிவிடப்பட்டுள்ளது இந்தியா. அதேவேளை சீனாவுக்கு அதிகளவு திட்டங்களை தாரை வார்ப்பது தொடர்கதையாகியுள்ளது. மொறஹகஹந்த என்ற பாரிய நீர்த்தேக்கத்தைக் கட்டும் பணிக்கான ஒப்பந்தம்கூட அண்மையில் சீனாவுக்கே வழங்கப்பட்டது. இவ்வாறாக சீன முதலீடுகள் இலங்கையில் அதிகரித்து வருவதை இந்தியாவும், அமெரிக்காவும் கவலையோடு பார்க்கின்றன.

இந்த முதலீட்டுப் போரில் அமெரிக்காவின் கைஓங்குமேயானால், ஈரான், சீனா என இரண்டு காய்களை ஒரே நேரத்தில் அடித்து வீழ்த்தும்.

நன்றி: இணையம்

# மன்னாரில் மீளக்குடியமர்ந்த மீனவ குடும்பங்களை வேரறுக்கும் விசமிகள்

(மன்னார்)

அகதிகளாக சென்ற மன்னார் மாவட்டத்தை சேர்ந்த தமிழ் மீனவக் குடும்பங்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படவிருந்த படகு இயந்திரங்கள் எந்த விதத்திலும் பாதிப்பை எதிர்நோக்காத முஸ்லிம் குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக மன்னார் மாவட்டத்திலிருந்து சுமார் 175 தமிழ் மீனவக் குடும்பங்கள் இந்தியாவிற்கு படகுகள் மூலம் சென்றுள்ளனர்.

சுமார் 20 வருடங்களுக்கு முன்பு அகதிகளாக சென்ற இந்த மக்கள் தற்போது தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

இந்திய கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்ட மன்னார் மாவட்ட மீனவர்களின் படகுகள் நீண்டகாலமாக கடற்கரையில் இருந்ததனால் மிகவும் மோசமாக பழுதடைந்தன.

இதனால் அந்தப் படகுகளுக்கு பதிலாக சுமார் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான படகு இயந்திரமும் வழங்க இந்திய அரசாங்கம் முடிவு செய்ததோடு பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களின் பெயர் பட்டியலை தருமாறு கோரியிருந்தது.

இதன் பிரகாரம் குறித்த மீனவ குடும்பங்களின் பெயர் பட்டியல் தயாரிக்கப்பட்ட போதும் அவை பின்பு மாற்றப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட தமிழ் மீனவ குடும்பங்களின் பெயர்கள் நீக்கப்பட்டு பாதிப்புக்குள்ளாகாத முஸ்லிம் மீனவக் குடும்பங்களின் பெயர் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பெயர்ப்பட்டியலை மாற்றியமைத்ததில் முஸ்லிம் இனத்தை சார்ந்த அமைச்சர் ஒருவர் முக்கிய பங்கு வகித்திருந்துள்ளார்.

இதனால் பாதிக்கப்பட்ட தமிழ் மீனவக் குடும்பங்கள் பல்வேறு தரப்பினரிடமும் தமக்கு ஏற்பட்ட அநீதியை எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்திய அகதிமுகாம்களில் நீண்ட காலம் பல துன்பங்களை அனுபவித்து சொந்த நாடு திரும்பிய மக்களுக்கு தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்காக கொடுக்கப்படவிருந்த கடற்தொழில் உபகரணங்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்குவதை தடுத்து நிறுத்தியமை தொடர்பில் இந்திய அரசாங்கத்திடம் முறையிடப் போவதாகவும் பாதிக்கப்பட்ட மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ-6)

# செயலமர்வு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 4 இல் கல்வி கற்பிக்கும் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கான உள்ளடக்க கல்வி தொடர்பான செயலமர்வு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு மு/மாங்குளம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இதேதினம் தரம் 5 மாணவர்களுக்கான மாகாணமட்ட பரீட்சை அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளதாகவும் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார். (அ-3-15)

# புகையிரத விபத்துக்களால் 44 பேர் பலி; 26 பேர் படுகாயம்

## பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இவ்வருடம் முதல் ஆறு மாதங்கள் வரையான காலப்பகுதியில் இலங்கையின் பல பாகங்களிலும் இடம்பெற்ற புகையிர விபத்துக்களில் 44 பேர் உயிரிழந்தும் 26 பேர் காயமடைந்தும் உள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி விபத்துக்கள் தொடர்பாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் விடுத்துள்ள அறிக்கைப்படி மோட்டார்சைக்கிள், முச்சக்கர வண்டி, கார் என்பவற்றில் பயணிப்போரின் கவனமின்மை, அறியாமை என்பவற்றாலும் பாதுகாப்பற்ற முறையில் ரயில் கடவைகள் ஊடாக வாகனங்களை செலுத்தியதன் மூலமே மேற்கூறிய அநேகமான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும் மேல் மாகாணத்திலேயே அதிக விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் விபத்து தொடர்பாக எதுவித சம்பவங்களும் பதியப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-2)

# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## ஜெயலலிதா மன்மோகனுக்கு கடிதம்



(சென்னை)

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள இராமேஸ்வரம் மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் மன்மோகன்சிங்கை முதல்வர் ஜெயலலிதா மீண்டும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து அவர் எழுதியுள்ள கடிதம் வருமாறு, தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதை தடுத்து நிறுத்துமாறு ஏற்கனவே தங்களின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன். இராமேஸ்வரம் முகுந்தராயசத்திரத்தை சேர்ந்த மூன்று மீனவர்கள் கடந்த மாதம் 20 ஆம் திகதி மீன்பிடிக்க சென்ற போது கச்சதீவு அருகே இலங்கை கடற்படையினர் பிடித்தச் சென்றனர்.

இவர்கள் புகையிலை பொருட்கள் கடத்தி வந்ததாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளனர். மற்றொரு சம்பவத்தில் இராமநாதபுரம் மீனவர்கள் 10 பேரை கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது பிடித்து சென்று இலங்கை சிறையில் அடைத்துள்ளனர். மேலும் 10 மீனவர்கள் மீது பொய்யான வழக்குகள் தொடர்ந்து கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 29 ஆம் திகதி சிறையில் அடைத்துள்ளனர். தமிழக மீனவர்கள் மீது இதேபோல தொடர்ந்து தாக்குதல்கள் நடத்திவருவது மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

இலங்கை கடற்படையின் இந்த அத்துமீறல் செயல்களால் மீனவர்களின் குடும்பம் பெரும் துயரத்துக்கு உள்ளாகிறது. எனவே இலங்கை கடற்படையின் இந்த அத்துமீறல்களை இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்று கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றுள்ளது. (அ-2)

# பாலியல் வன்புணர்வு குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதியிடம் மீண்டும் கோருகிறார் அனோமா

(கொழும்பு)

சிறார்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் என தாம் மீண்டும் ஒருமுறை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்க எண்ணியுள்ளதாக சிறுவர் விவகார திணைக்களத்தின் தலைவரும் சட்டத்தரணியுமான அனோமா திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதை கவனத்தில் கொண்டு இந்த கோரிக்கையை விடுக்க உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்துடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு தற்போது 20 வருடத்திற்கும் குறைவான சிறைத் தண்டனையே வழங்கப்படுகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இலங்கையில் தற்போது சிறுமிகளை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதுடன் இவ்வாறான சம்பவம் தொடர்பாக ஆளும் கட்சியை சேர்ந்த பிரதேச சபைத் தலைவர் ஒருவர் இன்று கைது செய்யப்பட்டார். (அ-2)

# விண்வெளிப் பயணத்தில் முதல் இலங்கை வீரர்; சீனாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்தாகியது

(கொழும்பு)

இலங்கையின் தனியார் நிறுவனமான சுப்ரிம் சட், சீன அரசாங்கத்திற்கு சொந்தமான மிகப் பெரிய செய்மதிகளைத் தயாரிக்கும் கிரேட் வோல் கோப்பரேசன் நிறுவனத்துடன் இணைந்து இன்னும் 4 ஆண்டுகளுக்குள் விண்வெளிக்கு இலங்கையர் ஒருவரை அனுப்பி வைக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சாதனையை நாம் ஏற்படுத்தவுள்ளோம்.

ஒரு இலங்கை விண்வெளி வீரரை விண்வெளிக்கு அனுப்புவதற்கான ஒப்பந்தம் சீனத்தலைநகரமான பீஜிங்கில் கைச்சாத்திடப்பட்டது.

சுப்ரிம் சட் நிறுவனத்தின் நிர்வாகப் பணிப்பாளர் ஆர்.எம்.மணிவண்ணன் தமது நிறுவனம் எமது நாட்டின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கக் கூடிய வகையில் ஒரு செய்மதியை சொந்தமாக வாங்கக் கூடிய தகுதியை அடைந்திருப்பதாக கூறியுள்ளார்.

உலகின் 44 நாடுகளுக்கு சொந்தமாகவே செய்மதிகள் உள்ளன. சில நாடுகள் மற்றைய இரண்டு, மூன்று நாடுகளுடன் இணைந்தே செய்மதிகளைச் சொந்தமாக வைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமது நிறுவனம் சீன நிறுவனத்துடன் இணைந்து ஒரு செய்மதியை கடந்த மாதம் விண்வெளிக்கு அனுப்பி வைத்ததாகவும் அடுத்த நடவடிக்கையாக தாம் இலங்கைக்கு சொந்தமான ஒரு செய்மதியை சீனாவின் கிரேட்வோல் அனுசரணையுடன் தயாரிக்கவிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இலங்கைக்கு முழுமையாக இருக்கும் இந்த செய்மதி தயாரிப்பு பணிகள் இன்னும் இரண்டு ஆண்டில் தயாராகி விடும் என்றும் இதற்கென தாங்கள் மொத்தம் 300 மில்லியன் அமெரிக்க டொலரை முதலீடு செய்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

1957ஆம் ஆண்டிலேயே உலகின் முதலாவது செய்மதி தயாரிக்கப்பட்டு விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. அதற்கு ஸ்புட்நிக் என்று பெயரிடப்பட்டது. விண்வெளியில் 900 இற்கும் அதிகமான செய்மதிகள் இன்று பூமியை வலம் வந்து கொண்டிருக்கின்றன.

ஒரு செய்மதி 15 வருட ஆயுளைக் கொண்டுள்ளது. தமது நிறுவனம் அடுத்த நடவடிக்கையாக இலங்கையின் இளைஞர் ஒருவருக்கு விண்வெளித் தொழில்நுட்பத் துறைக்கு சீனாவில் பயிற்சி அளிப்பதற்கு தீர்மானித்திருக்கிறதென்றும் இதையடுத்து விரைவில் விண்வெளி வீரர்களாக பயிற்சி பெற விரும்புபவர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு சீனாவில் பயிற்சி அளிக்கப்படும். மூன்று, நான்கு வருடங்களில் எமது இளைஞர்களில் ஒருவருக்கு விண்வெளிக்கு விஜயம் செய்வதற்கான ஒரு அரிய வாய்ப்பு கிடைக்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-2)

# மதகுருமார் பிரேரணையை எதிர்த்து வாக்களியுங்கள்

## ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர்களாக மதகுருமார் தெரிவாகுவதை தடுப்பதற்கான பிரேரணைக்கு எதிராக வாக்களிக்குமாறு அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்துள்ளார்.

மதகுருமார் தீவிர அரசியலில் ஈடுபடுவதை குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகுவதை தடுப்பதற்கான தனிநபர் பிரேரணையொன்றை ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாச ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




# பூனையால் அழிந்த கழுகு

## பஞ்ச தந்திரக் கதைகள்

அந்த மலையிலுள்ள மரங்களில் அத்தி மரம் ஒன்று நன்றாக ஓங்கி வளர்ந்து காணப்பட்டது.

அந்த மரத்தில் இருந்த பொந்தில் ஒரு வயதான கழுகு தங்கியிருந்தது.

அந்தக் கழுகால் ஓடியாடி உணவு எதையும் தேட முடியவில்லை.

அதற்கு வரவரக் கண் பார்வையும் மங்கிக் கொண்டு வந்தது.

இவ்விதமாகக் கழுகு பரிதாபமாக வாழ்ந்து வந்ததால் அந்த மரத்தில் வசித்து வந்த ஏனைய பறவைகள் அனைத்தும் தாம் கொண்டு வரும் ஆகாரத்தில் ஒரு பங்கை அந்தக் கிழட்டுக் கழுகுக்குக் கொடுத்து வந்தன.

இவ்விதமாக அந்தக் கழுகு கால் வயிறும் அரை வயிறுமாக உணவு உண்டு வாழ்ந்து வந்தது.

ஒருநாள் அந்த வழியாகப் பூனை ஒன்று வந்தது.

மரத்தின் மீது பறவைக் குஞ்சுகளின் சப்தம் கேட்கவே அவைகளைப் பிடித்து உண்ணலாம் என்ற எண்ணமுடன் மரத்தில் ஏறவும் அங்கே கழுகைக் கண்டு விட்டது.

இவ்விதம் கழுகு அங்கே இருக்கும் என்பதை எதிர்பாராத பூனை கழுகுக்கு வணக்கம் தெரிவித்தது.

கழுகுக்கு இவ்விதம் வணக்கம் கூறவும் கழுகுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

இந்தப் பூனை நமக்கு என்ன தொல்லை கொடுக்கப் போகிறதோ தெரியவில்லையே என்று எண்ணி வருந்தியது.

அதன்பின்னர் கண் தெரியாத நிலையிலும் பூனையை விரட்டியது.

பூனையே! நீ இங்கிருந்து எங்களுக்குத் தொல்லை கொடுக்காதே! நீ ஓடிவிடு இங்கிருந்து.

இல்லாவிட்டால் எனக்குத் துன்பம் வந்து சேரும்! என்று அதட்டியது.

ஆனால், பூனை அதை கண்டு கொள்ளவில்லை.

பூனை மிகவும் பணிவுடன் பேச ஆரம்பித்தது.

ஐயா! நாள்தோறும் நான் கங்கையில் நீராடி வருகிறேன். உங்களைக் கற்றறிந்த ஞானி என்று அனைவரும் போற்றுகிறார்கள்.

உங்களிடம் அறிவுரை கேட்டுச் செல்வதற்காகவே வந்துள்ளேன்.

என்னை இவ்விதம் விரட்டுகிறீர்களே! என்று பணிவுடன் கூறியது.

இவ்விதம் பூனை பேசவும், கழுகு கொஞ்சம் மகிழ்ச்சியடைந்தது.

அதனால் அமைதியாகக் காணப்பட்டது.

இருந்தாலும் பூனையின் குணம் அறிந்து அதை விரட்டுவதிலேயே குறியாக இருந்தது.

எவ்விதமும் பறவைகளின் குஞ்சுகளைப் பிடித்து உண்பதிலேயே குறியாக இருந்த பூனை, தான் நீதி நெறியுடன் வாழ்வதாகக் கூற ஆரம்பித்தது.

ஐயா! நான் நீதி நூல்களை நன்கு கற்றுத் தேறியவன். நான் என்றுமே பிற உயிர்களை நல்ல முறையில் நேசிப்பவன்.

எந்தக் காரணம் கொண்டும் பிற உயிர்களுக்குத் துன்பம் கொடுக்கவேமாட்டேன்.

பாவங்கள் அனைத்திலும் கொடிய பாவம் என்ன தெரியுமா? பிற உயிர்களுக்குத் தொல்லை கொடுப்பதாகும்! என்று ஒரு குட்டிப் பிரசங்கமே பண்ணிவிட்டது.

இவ்விதமாக அந்தப் பூனை நடிக்கவும் கழுகு நம்பி விட்டது.

சரி, நீ இங்கேயே தங்கிக் கொள்ளலாம்.

எந்தப் பழியும் உன்னால் வரக்கூடாது! என்று பூனையிடம் கூறவும் அது தலையசைத்தது.

கழுகுக்கு சரியாக கண்கள் தெரியாததைப் பயன்படுத்தி ஒவ்வொரு நாளும் பறவைக் குஞ்சுகளை கொன்று தின்ன ஆரம்பித்தது.

இவ்விதம் கொன்று தின்று விட்டு அந்த எலும்புகளை



கழுகின் பொந்தில் போட்டு விடும்.

குஞ்சுகள் காணாமல் போவதை அறிந்த பறவைகள் அதன் காரணத்தைக் கண்டுபிடிக்க தீவிரமாக முயற்சி செய்தன.

இதை அறிந்த பூனை இனி நாம் அங்கிருந்தால் பறவைகள் அனைத்தும் சேர்ந்து நம்மைக் கொன்றுவிடும் என்று எண்ணி அங்கிருந்து சென்றுவிட்டது.

இவ்விதமாகப் பூனை வந்து தங்கி இருந்ததையோ தம்முடைய குஞ்சுகளைப் பிடித்து தின்றதையோ அறியாத பறவைகள் அனைத்தும் கழுகு வசித்து வந்த பொந்தை வந்து பார்த்து இந்த வயதான கழுகு தான் தம் குஞ்சுகள் அனைத்தையும் பிடித்து தின்று வந்திருக்கிறது என்று எண்ணி ஆத்திரமுடன் அதன் மீது பாய்ந்து அதை அடித்துக் கொன்று விட்டன.

இவ்விதமாக எந்தப் பாவமும் அறியாத கழுகு பொல்லாத பூனையால் அழிவைத் தேடிக் கொண்டது.

# நரி ஒன்று கட்டிய ஆகாயக் கோட்டை

அந்தக் காட்டில் வேடன் ஒருவன் கையில் வில்லுடனும் அம்புகளுடனும் வேட்டையாடப் புறப்பட்டான்.

ஒரு காட்டுப் பன்றியைக் கண்டதும் அந்த மகிழ்ச்சியில் அதன் மீது குறி வைத்தான்.

அவன் குறி தவறாமல் அம்பு எய்யும் ஆற்றல் படைத்தவன். எனவே, அம்பு பன்றியின் உடலில் பாய்ந்து விட்டது.

அந்தப் பன்றி இறந்து விட்டது என்ற எண்ணத்தில் அதன் பக்கத்தில் செல்லவும் தன்னைச் சித்திரவதை செய்பவன் இந்த வேடன் தான் என்பதை உணர்ந்து அவன் மீது பாய்ந்து அதனுடைய கூரிய பற்களால் அவன் வயிற்றைக் கிழித்தெறிந்து அவனைச் சாகடித்ததோடு தானும் செத்து விட்டது.

அவ்வேளை அங்கு பசியால் வாடிய நரி ஒன்று வந்தது.

பன்றியும் வேடனும் இறந்து கிடக்கவே அது பெரிதும் மகிழ்ந்தது.

இன்று நமக்கு நல்ல வேட்டை தான் என்று எண்ணிக் கொண்டு இருந்த அந்தக் குள்ள நரி முதலில் எதை உண்பது என்று சிந்தித்தது.

இவ்விதம் எண்ணிக் கொண்டிருக்கவும் கீழே கிடந்த வில்லையும் அம்புகளையும் அது பார்த்து விட்டது.

முதலில் இந்த வில் நரம்பை அறுத்து உண்டு சிறிது பசியாறிய பின் பன்றியின் இறைச்சியை உண்ணலாம் என்று எண்ணி அந்த நரம்பை பலம் கொண்ட அளவு கடித்ததும் வில்லின் நரம்பு அறுபட்டு அது நேராக நிமிர்ந்து விடவும் அது நரியின் வாயைக் கிழித்து முகத்தையும் சிதைத்து விடவே ஊளையிட்ட வண்ணம் அந்த இடத்திலேயே விழுந்து இறந்தது.

இவ்விதமாக ஆகாயக் கோட்டை கட்டிய நரி ஒன்று பரிதாபமாக இறந்தது.

# வடக்கில் அதிகளவான பிரச்சினைகளுக்கு இதுவரையில் தீர்வு வழங்கப்படவில்லை

## மாற்றுக்கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் அதிகளவான பிரச்சினைகளுக்கு இதுவரையில் தீர்வு வழங்கப்படவில்லை என மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதாரம், உட்கட்டுமானம், முன்னாள் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல் போன்ற துறைகளில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

எனினும் யுத்தம் இடம்பெற்ற வலயத்தில் பாரியளவிலான பிரச்சினைகள் தொடர்ந்தும் நீடித்து வருகின்றன.

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருவதாகவும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்கள் மீள விசாரணைக்கு உட்படுத்தப்படுவதாக தகவல் கிடைக்கப்பெற்றுள்ளன.

இன சமூகங்களுக்கிடையில் அரசியல் தீர்வுத்திட்டமொன்றை எட்டுவதற்கு தேவையான பின்னணி இதுவரையில் உருவாக்கப்படவில்லை. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவும் இல்லை.

குற்றச்செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை வடக்கு இராணுவமயமாக்கல், தகவல் அறிந்து கொள்ளும் உரிமை தொடர்பான சட்ட மூலத்தை அமுல்படுத்தாமை , யுத்தம் தொடர்பான சம்பவங்களை விசாரணை செய்ய சுயாதீன ஆணைக்குழு உருவாக்காமை என பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன.

ஏ.சீ.எப். தொண்டு நிறுவன பணியாளர் படுகொலை, திருகோணமலை மாணவர் படுகொலை, சனல் 4 வீடியோ காட்சி போன்றன தொடர்பில் விசாரணை நடத்துமாறு உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பரிந்துரைகள் உரிய முறையில் அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## குடத்தனையில் இலவச மருத்துவமுகாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் பிரபல மருத்துவ நிபுணர்கள் பங்கு கொண்டு நடத்தும் இலவச மருத்துவமுகாம் நாளை சனிக்கிழமை குடத்தனை பிரதேச செயலகத்திற்கு அருகாமையிலுள்ள கத்தோலிக்க திருச்சபையில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளதாக யா சென். ஜோன்ஸ் கல்லூரி ஒன்றுகூடும் அமைப்பு அறிவித்துள்ளது. (அ-9)

## கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து மேன்முறையீடு

கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரான இராசய்யா துரைரத்தினம் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு இல்லாத நிலையில் மாகாண சபையின் கால எல்லை முடிவடைவதற்கு முன்னதாக அதனை கலைத்துள்ளமை மக்கள் மத்தியில் தேர்தல் தொடர்பாகவுள்ள நம்பிக்கை அற்றுப் போவதற்கு காரணமாக அமைந்துள்ளது என அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்ரம, முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மற்றும் மூன்று மாகாண அமைச்சர்கள் உள்ளிட்ட சிலர் இந்த மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலம் 2013 ஆம் ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் நிறைவடையவிருந்த நிலையில் அதற்கு முன்னதாக மாகாண சபை கலைக்கப்படக்கூடாது என்ற பிரேரணையொன்று சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மாகாண சபையைக் கலைப்பதற்கு ஆளுநர் மேற்கொண்ட தீர்மானத்திற்கு இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்குமாறு மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதுதவிர கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவதை தடுப்பதற்கும் தேர்தல் ஆணையாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் மேலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ-2)

## யாழ்.மாவட்ட இளைஞர் அணி அங்குரார்ப்பணம்

தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட இளைஞரணி அங்குரார்ப்பண கூட்டம் கடந்த 3 ஆம் திகதி கட்சியின் யாழ். மாவட்ட தலைமை அலுவலகத்தில் இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞரணி செயலாளர் வி. எஸ். சிவகரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவராக பா. கஜதீபன், செயலாளராக ப. தர்சானந், பொருளாளராக ச.சுகிர்தன், உப தலைவர்களாக பூ. சஞ்சீவன், அ.ஜெபநேசன், உப செயலாளராக தி. பிரகாஷ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் கலந்து கொண்ட இளைஞர்களிடையே இருந்து கிளிநொச்சி தொகுதி நீங்கலாக பத்து தொகுதியிலும் இருந்து தொகுதி பிரதிநிதிகளாக, ஊர்காவற்றுறை- அ.ஜஸ்ரின், யாழ்ப்பாணம்-ஸ்ரீபன் றோனோல்டன், ம.சசிதரன், கோப்பாய்- க.ரவீந்திரன், சி.நந்தகுமார், நல்லூர்- பா.தர்சானந்த், சுரேஷ்குமார், உடுப்பிட்டி- கு. ராஜ்குமார்,கோ. மயூரன், வட்டுக்கோட்டை- அனார்த்தனன், ஜோன் ஜிப்றிக்கோ, வே. ஆனைமுகன், மானிப்பாய்- பா. கஜதீபன், ஆ.ஜெபநேசன், தி.பிரகாஷ், காங்கேசன்துறை- க.மயூரதன், செ.தனராஜ், ஆ. சுதன், சாவகச்சேரி- க.யோகராசா, ஞா.கிஷோர், பருத்தித்துறை-கி.கணேசவேள், க.சுகிர்தன், பூ. சஞ்சீவன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

நிகழ்வில் கட்சியின் பொதுச்செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், சாவகச்சேரி தொகுதி அமைப்பாளர் அருந்தவபாலன் மற்றும் யாழ்.மாவட்ட இளைஞர்கள் இதில் கலந்து கொண்டனர். (அ-9)

## வவு. தமிழ்ச் சங்கத்தில் உரை ஓவிய நிகழ்வு

(பூந்தோட்டம்)

வவுனியா தமிழ்ச்சங்கத்தின் உரை ஓவிய நிகழ்வின் இவ்வார நிகழ்வாக இலக்கிய நயம் பகிரல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் 12 மணி வரை வைரவ புளியங்குளம் ஆதி விநாயகர் ஆலய கலையரங்கில் நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்ட தமிழ் சங்கத்தலைவர் தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மங்கல விளக்கினை திருப்பணிச் செம்மல் தி.தில்லைநாதன், இறைபணிச்செம்மல் வை. சே. தேவராசா ஆகியோர் ஏற்ற தமிழ்த்தாய் வாழ்த்தினை இசைக்கலைமணி திருமதி பராசக்தி ஜெகநாதன் இசைக்க வாழ்த்துரையினை சிவஸ்ரீ சி.திவாகரக்குருக்கள் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் இலக்கிய நயம் தொடர்பான உரைஓவியக்கருத்துக்களை வவுனியா தெற்கு வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் கவிச்சிகரம் கி.உதயகுமார், வவுனியா பிரதேச செயலாளர் கவிஞர் அ. சிவபாலசுந்தரன், வவுனியா தெற்கு வலய தமிழ்ப்பாட ஆசிரிய ஆலோசகர் கவியெழில் திருமதி த. நிறைமதி மற்றும் எம்.முகுந்தரதன், எஸ்.ஸ்ரீநிவாசன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (அ-266)




# இலங்கை இராணுவவீரர்களுக்கு இந்திய மண்ணில் பயிற்சி அளிப்பதா? ஏற்கமுடியாது

## முதல்வர் ஜெயலலிதா மற்றும் கருணாநிதி கடும் கண்டனம்



(சென்னை)

**இலங்கைத் தமிழர்களை கொன்று குவித்த இலங்கை இராணுவ வீரர்களுக்கு தமிழ் மண்ணில் பயிற்சி அளிப்பதை ஏற்க முடியாது என்றும் இந்த பயிற்சிக்கு வந்த இலங்கை வீரர்களை இலங்கைக்கு மீண்டும் திருப்பியனுப்ப வேண்டும் என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா மத்திய அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.**





இலங்கைக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வரும் ஜெயலலிதா இன்று இது தொடர்பாக மத்திய அரசுக்கு கண்டனம் தெரிவித்து ஒரு செய்திக்குறிப்பை வெளியிட்டார். இந்த அறிக்கையில் அவர் கூறியிருப்பவை வருமாறு,

இலங்கை இராணுவ வீரர்களுக்கு (விமானப் படை) இந்திய இராணுவத்தரப்பினர் பயிற்சி அளிக்கின்றது. சென்னை அருகே தாம்பரத்தில் உள்ள விமான பயிற்சி முகாமுக்கு வீரர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். இதற்கு கடும் கண்டனம் எழுந்துள்ளது.

இலங்கையில் புலிகள் ஆதிக்கத்தை ஒழிப்பதாக தமிழர்களை கொன்று குவித்த இலங்கைக்கு தமிழக கட்சியினர் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

சமீபத்தில் கூட இலங்கைக்கு எதிராக ஐ.நா.வில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும் என்றும் தமிழக முதல்வர் ஜெயலலிதா மற்றும் தி.மு.க., ம.தி.மு.க. உள்ளிட்ட கட்சியினர் வலியுறுத்தி வந்தனர். பாராளுமன்றத்தில் எம்.பி.க்கள் ஒட்டு மொத்தமாக பெரும் அமளியில் ஈடுபட்டனர். சட்டசபையிலும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இதற்கு மத்திய அரசு பணிந்து இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரித்தது.

**நெஞ்சில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது.**

இலங்கை வீரர்களுக்கு பயிற்சி அளிப்பது என்பது தமிழகத்திற்கும் தமிழ் இனத்திற்கும் எதிரான செயல். சர்வதேச அளவில் இலங்கைக்கு எதிராக குரல் ஒலித்து வரும் போது இதுபோன்று பயிற்சிக்கு இந்திய முன் வந்திருப்பது பொருத்தமற்றது.

இலங்கை மீது பொருளாதாரத்தடை விதிக்க வேண்டும் என தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதற்கு மௌனம் சாதித்து வரும் மத்திய அரசு பயிற்சி அளிப்பது தமிழர்களை அவமானப்படுத்தும் செயல் ஆகும்.

இந்திய அரசின் இந்த நடவடிக்கை தமிழர்களின் நெஞ்சில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. இது தமிழக மக்களின் சார்பில் எனது கண்டனத்தை தெரிவித்து கொள்கின்றேன். பன்னாட்டு போர் விதி முறைகளை மீறி எடுக்கப்பட்ட தொடர்பானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தியா வின் இந்த நிலை கண்டிக்கத்தக்கது. இலங்கை வீரர்களை அவர்களது நாட்டிற்கு திருப்பி அனுப்பிட மத்தியரசு முடிவு எடுக்க வேண்டும் என அவர் அதில் கூறியுள்ளார்.

**கருணாநிதி கண்டனம்**

இது தொடர்பாக தி.மு.க. தலைவர் கருணாநிதியும் கண்டனம் தெரிவித்துள்ளார். கருணாநிதி சார்பில் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டவை வருமாறு,

இலங்கை இர்ராணுவத்தினருக்கு பயிற்சி அளிப்பது கண்டிக்கத்தக்கது என்றும் உடனடியாக திரும்ப அனுப்ப வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**பிரதமர் கருணாநிதிக்கு கடிதம்**

பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி எழுதிய கடிதத்துக்கு பிரதமர் மன்மோகன்சிங் பதில் அனுப்பியுள்ளார். அதில் கூறி இருப்பதை வருமாறு,

இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சு, இலங்கை அமைச்சர் சம்பிக்க ரணவக்கவுடன் பேச்சு தொடர்பாக கடந்த மாதம் 20 ஆம் திகதியிடப்பட்ட தங்கள் கடிதம் கிடைக்கப்பெற்றேன். ஜூன் 21 ஆம் திகதி ரியோடி ஜெனிரோ மாநாட்டில் இலங்கை ஜனாதிபதியை சந்தித்தேன். அப்போது இந்தப் பிரச்சினை தொடர்பாகவும் இலங்கை தமிழர்கள் மறுவாழ்வு அமைத்து கொடுப்பதற்காக இலங்கை அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அவரிடம் பேசினேன்.

தமிழர் பிரச்சினைக்கு இலங்கைக்கு உள்ளேயே தகுந்த அரசியல் தீர்வுகாண தே[illegible]யான ஏற்பாடுகளை செய்ய வேண்டிய அவசியம் குறித்து இலங்கை ஜனாதிபதியிடம் வலியுறுத்தினேன். அது தான் இலங்கை தமிழர்கள் கௌரவமான வாழ்க்கை வாழவும் சொந்த வீட்டில் வசிப்பது போன்ற உணர்வை பெறவும் போதுமான நடவடிக்கையாக அமையும் என்றும் தெரிவித்தேன் என அந்த கடிதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார். (அ-2)

## பார்வையற்றோர் பாவனைக்கு புதிய ஏ.ரி.எம். இயந்திரம்



(ஷார்ஜா)

மத்திய கிழக்கு நாடுகளில் முதல் முறையாக பார்வையற்றோர் மற்றும் பார்வைக்குறைபாடுள்ளவர்களுக்கான ஏ.டி.எம். இயந்திரம் ஐக்கிய அரபு நாடுகளில் ஒன்றான ஷாஜாவில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஏ.டி.எம். இயந்திரத்தில் ஒரு பெரிய விசைப்பலகை (கீ போர்ட்டு) உயர்தர திரை, பெரிய பட்டன்கள், ஹெட்போன் ஆகியவை இடம்பெற்றுள்ளன. மேலும் வாடிக்கையாளர்கள் தங்கள் பணப்பரிமாற்றத்தை உறுதி செய்து கொள்வதற்காக ஒலிபெருக்கி ஒன்றும் இந்த ஏ.டி.எம். உடன் இணைக்கப்பட்டிருக்கின்றது.

சாதாரண ஏ.டி.எம். ஐ. விட குறைவான பட்டன்களே இந்த ரக ஏ.டி.எம். இல் இருக்கும். பார்வையற்றோர்கள் மட்டுமல்லாமல் பார்வை உடையவர்களும் பயன்படுத்தும் வகையில் இந்த இயந்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. (அ-2)

## பி.பி.சி. மீது குற்றச்சாட்டு

(டெஹ்ரான்)

ஈரான் அணுவாயுத திட்டங்கள் குறித்து பி.பி.சி இணையத்தளம் உண்மைக்கு மாறான தகவல்களை வெளியிட்டு வருவதாக ஈரான் தொலைக்காட்சி பரபரப்பு குற்றச்சாட்டு தெரிவித்துள்ளது.

ஈரான் நாட்டில் யுரேனியம் செறிவூட்டல் குறித்த நிகழ்வு 24 சதவீத அளவிற்கு மட்டுமே நிகழ்ந்துள்ளதாகவும் ஆனால் பார்சி மொழியிலான பி.பி.சி. இணையத்தளத்தில் இதன் மதிப்பு 63 சதவீதம் என குறிப்பிடப்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது என அந்த தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. (அ-2)

## ஆர்ஜென்டீனா நாட்டுக்கான தூதுவராக ஜெனானி தெரிவு



தென் ஆபிரிக்க தலைவர் நெல்சன் மண்டேலாவின் மகள் ஜெனானி ஆஜென்டீனா நாட்டு தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். தென் ஆபிரிக்க தலைவரான நெல்சன் மண்டேலாவின் மூத்த மகள் ஜெனானி (வயது-53). மண்டேலா சிறையில் இருந்த போது 16 வயது பெண்ணான இவர் தனது தந்தையை பார்க்க சென்ற போது இவருக்கு அனுமதி மறுக்கப் பட்டது.

ஜெனானி அமெரிக்காவின் பொஸ்டன் நகரில் படித்தார். கணவரை விவாகரத்து செய்த பின் தற்போது தென்ஆபிரிக்காவில் தான் வசித்து வருகிறார். இதற்கிடையே இவர் ஆர்ஜெண்டீனா நாட்டு தூதராக நியமிக்கப்பட்டு உள்ளார். இவர் தூதராக நியமிக்கப்பட்டுள்ளதை ஆர் ஜெண்டீனா அரசு வரவேற்றுள்ளது. (அ-2)

# நேட்டோ படைகளுக்கான களஞ்சிய வாகனங்களைத் தகர்ப்போம்- தலிபான்கள்

நேட்டோ படைக்கு பாகிஸ்தானின் வழியாக பொருட்கள் மற்றும் எரிபொருள் எடுத்து செல்லும் வாகனங்களை தகர்ப்போம் என்று தலிபான் தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் முகாமிட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் கடந்த நவம்பர் மாதம் குண்டு வீசித்தாக்கியதில் பாக். வீரர்கள் 24 பேர் கொல் லப்பட்டனர். இதனை அடுத்து நேட் டோ படைக்கு பொருட்கள் எடுத்துச் செல்லும் வழியை பாகிஸ்தான் மூடிவிட்டது.

இதனால் நேட்டோ படைக்கு பல சிக்கல் ஏற்பட்டது. அமெரிக்கா பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும் பாகிஸ்தான் பிடியாக மறுத்து வந்தது. பாகிஸ்தான் வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு மன்னிப்பு கேட்க வேண்டும் என வலியுறுத்தியது.

இறுதியாக அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி ஹிலாரி கிளின்டன் நேற்று முன்தினம் பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி ஹினா ரப்பானி காருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு மன்னிப்பு கோரினார். இதனையடுத்து பொருட்கள் எடுத்து செல்லும் வழியை திறக்க பாகிஸ்தான் இராணுவ அமைச்சகம் முடிபு செய்தது.

பாகிஸ்தானின் இந்த திடீர் பல்டி முடிபுக்கு தலிபான் தீவிரவாத இயக்கங்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. தெஹ்ரீக்-இ- தலிபான் அமைப்பு செய்தி தொடர்பாளர் இது தொடர்பாக மிரட்டல் விடுத்தார். இது பற்றி அவர் கூறியதாவது,

ஆப்கானிஸ்தானியர்கள் எங்கள் சகோதரர்கள். பாகிஸ்தான் வழியாக அமெரிக்கா ஆயுதங்களை எடுத்துச் சென்று ஆப்கானிஸ்தான் மக்களை கொல்வதை நாங்கள் அனுமதிக்க முடியாது.

இந்த வழியாக எடுத்துச் செல்லப்படும் ஆயுதங்கள் பின்னர் ஆப்கானிஸ்தான் மக்களை தாக்க பயன்படுத்தப்படலாம். ஆகவே பாகிஸ்தான் வழியாக நேட்டோ படைக்கு பொருட்களை எடுத்து செல்லும் வாகனங்கள், எரிபொருள் டேங்கர் ஆகியவற்றை தகர்ப்போம்.

பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் இதுவரை நடத்தியது நா[illegible]கமே. அமெரிக்காவிடம் அடிமையாக இருந்து பயன் அடையவே நினைக்கிறார்கள். மக்கள் மீதோ நாட்டின் மீதோ பாசம் எதுவும் கிடையாது. எனவே பாகிஸ்தான் வழியாக பொருட்கள் எடுத்துச் செல்வதை அரசியல் கட்சிகளும் மத தலைவர்களும் தடுக்க முன்வரவேண்டும் என அவர் கூறியுள்ளார். (அ-2)

தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால்
தம்பி சண்டப்பிரசண்டன் ~தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தமிழ்க் கைதிகள் படும்பாடு காணீரோ!

தமிழ் மக்கள் பல்வேறு வகைகளில் பல்வேறு இடங்களில் வைத்து வதைபடும் துயரம் சொல்லி மாளா.

இந்த நாட்டில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழக்கூடாது என்ற அடிப்படையில் பெரும் கொடுமைகள் நடந்தேறுகின்றன.

காணி அபகரிப்பு, சொந்த மண்ணில் குடியிருக்க அனுமதி மறுப்பு என்பது தொடக்கம் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டுதமிழ்க்கைதிகளைவதைப்பது வரை நடக்கின்ற நிட்டூரத்தைத் தட்டிக் கேட்க எவரும்இல்லாதநிலைமை இங்குதொடர்கின்றது.

இவை எல்லாவற்றிலும் தமிழ்க் கைதிகள் படும் வேதனைகளும் துன்பமும் வெளிவராதவையாக இருப்பது மிகப் பெரும் கொடூரம் ஆகும்.

வன்னிப் போரில் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் புலிகள் அமைப்பில் முக்கிய பதவிகளில் இருந்தவர்கள் அரசோடு இணைந்து சௌகரியமாக வாழ்க்கை நடத்த, அரசோடு இணைந்த அதே நபர்களின் உத்தரவின் கீழ் மறுக்கமுடியாத நிலையில் செயற்பட்ட விடுதலைப் புலிகளின் சாதாரண தரப் போராளிகள் அல்லது போராளிகள் என்று சந்தேகிக்கப்பட்டவர்கள் வருடக் கணக்கில் சிறைகளில் அடைக்கப்பட்டு வதைக்கப்படுகின்றனர்.

சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகள் தங்கள் விடுதலை தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை பல தடவைகள் முன்வைத்து உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தியுள்ளனர்.

கைதிகள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தும் போது அரச தரப்பினர் அவர்களைச் சென்று பார்வையிட்டு, நீதிமன்ற விசாரணை மேற்கொள்ளப்படுமென்ற உறுதிமொழி வழங்குதலுடன் உண்ணாவிரதம் முடிவுக்குக் கொண்டுவரப்படும்.

ஆனால் முடிபு எதுவுமல்ல- இப்படியாகத் தமிழ்க் கைதிகள் படும் அவலங்கள் ஏராளம்.

எனினும் தமிழ்க் கைதிகளின் விடுதலை தொடர்பில் அரசு இதுவரை எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

மாறாக சிங்கள சிறைக் காவலர்கள் தமிழ்க் கைதிகளை காலத்திற்கு காலம் தாக்குவது அவர்களை அடித்துக் கொல்வது என்ற கொடூரத்தை செய்து கொண்டே இருக்கின்றார்கள். இதற்கெல்லாம் முடிபு கட்டவேண்டுமாயின் தமிழ்க் கைதிகளின் விடுதலைக்காக நாடு தழுவிய ரீதியில் அகிம்சை வழிப்போராட்டங்களை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டும்.

எங்கள் உறவுகள் சிறைகளில் வதைபடுவதை-அடைபட்டு இருப்பதை அடிக்கடி மறப்போமாயின் தமிழ்க் கைதிகளின் விடுதலை என்பது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

# வழக்கு நாட்களிலும் எம்.பிக்கள் பாராளுமன்றம் வர அனுமதியுண்டு

## சபாநாயகர் சுட்டிக்காட்டு

பாராளுமன்றம் கூடும் நாட்களில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஏதேனும் வழக்குக் காணப்படுமாயின் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ள அவருக்கு வரப்பிரசாதம் இருப்பதாக சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார மீதான வழக்கு இன்று சிலாபம் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அந்தச் சமயத்தில் அவர் பாராளுமன்ற அமர்வில் இருந்ததால் பாராளுமன்ற செயலாளர் மூலமாக சிலாபம் மேல்நீதிமன்றுக்கு ரங்கே பண்டார கடிதம் ஒன்றை அனுப்பினார்.

எனினும் அக்கடிதத்தை பெற்றுக் கொண்டும் சிலாபம் மேல்நீதிமன்ற நீதிபதி நீதிமன்றில் ஆஜராகாத பாலித ரங்கே பண்டாரவை கைது செய்யுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டது.

பாராளுமன்ற அமர்வு நடைபெறும் நாட்களில் வழக்கு விசாரணைக்குச் செல்லாமல் பாராளுமன்றிற்கு வருகை தர தனக்கு வரப்பிரசாதம் உள்ளதாகவும் அதனை பாதுகாத்துத் தரும்படியும் பாலித ரங்கே பண்டார சபாநாயகரிடம் நேற்று கேட்டுக்கொண்டார்.

இதன்போது கருத்து வெளியிட்ட சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, பாராளுமன்றம் கூடும் நாட்களில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ஏதேனும் வழக்குக் காணப்படுமாயின் பாராளுமன்ற அமர்வுகளில் கலந்துகொள்ள அவருக்கு வரப்பிரசாதம் இருப்பதாகச் சுட்டிக் காட்டினார்.

இதனை சிலாபம் மேல்நீதிமன்ற நீதிபதிக்கு எழுத்துமூலம் அறிவிக்கும்படி சபாநாயகர் பாராளுமன்றச் செயலாளருக்கு பணித்தார். (அ-2)

# ரட்டவிருவோ அமைப்பு கிளிநொச்சி மாவட்டத்தில்

புலம்பெயர் தொழிலாளர் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கான ரட்டவிருவோ அமைப்பு கிளிநொச்சி மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த 28 ஆம்திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இவ்வமைப்பினை ஆரம்பிக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு மற்றும் நலனோம்பல் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இவ்வமைப்பின் செயற்றிட்டமானது சமூகம், பொருளாதாரம், சுகாதாரம் மற்றும் கல்விப் பிரச்சினைகள் என்ற வரையறைகளை உட்படுத்தி அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இச்செயற்றிட்டம் கிராம அலுவலர் மட்டம், பிரதேச செயலக மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டம் என்ற அடிப்படையில் புலம் பெயர்ந்துள்ளவர்களின் விபரங்களை ஒன்றுதிரட்டி இவ்வமைப்பின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக அட்டவணை தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலர் எதிர்வரும் 25ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கும் அன்றைய தினம் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் பிற்பகல் 2 மணிக்கும் தொடர்ந்து பிற்பகல் 3 மணிக்கு கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலும் இவ்வமைப்பிற்கான அங்குரார்ப்பணம் நடைபெறவுள்ளது. (அ-9-254)

# கசிப்பு உற்பத்தி கட்டுப்படுத்தப்பட்டது

யாழ்.மதுவரித்திணைக்களத்திற் குட்பட்டபகுதிகளில் கசிப்பு உற்பத்தி பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக யாழ்.மதுவரிநிலைய பொறுப்பதிகாரி என்.கிருபாகரன் தெரிவித்துள்ளார்.

கடந்தகாலங்களில் சமூகத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய சட்டவிரோத மதுபான உற்பத்தியான கசிப்பு உற்பத்தி தலைதூக்கியிருந்தது. இதனால் பெரும் நெருக்கடி நிலைகளை மதுவரி நிலையம் எதிர்கொண்டிருந்தது. இருப்பினும் யாழ்.மதுவரி நிலையத்திற்குட்பட்ட பகுதியில் தற்போது கசிப்பு உற்பத்தி பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும் 21 வயதிற்குட்பட்டவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளபோதும் சில வர்த்தகர்கள் தொடர்ந்து சட்டத்தை மீறி வருகின்றனர்.

யாழ்.மதுவரிநிலையத்தினால் 13 வர்த்தகர்களுக்கு எதிராக மேற்படி குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவற்றைத் தடுக்க யாழ்.மதுவரிநிலையம் தொடர்ந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ளும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)



# வெள்ளி நற்சிந்தனை

79

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

ஒருவர் தன்னுடைய அனுபவத்தைப் பிறருக்கு எடுத்துச் சொல்ல முற்படும் போது பல்வேறு விதமாகச் சொல்லலாம். தன்னுடைய நிலையை நேரடியாக விளக்கிக்கூறலாம். அல்லது உவமை மூலம் விளக்கிக் கூறலாம். தமிழ்மொழி உணர்வை எடுத்துரைப்பதற்கு ஏற்றமொழியாகும். பக்தியுணர்வை விளக்கிக்கூறுவதற்கு உரிய மொழியாக நாயன்மாரால் பயன்படுத்தப்பட்ட மொழி. அதனால் பக்தியின் மொழி தமிழ் என்றும் வரையறை செய்யப்பட்டுள்ளது.

திருவாசகம் பாடிய மாணிக்கவாசகர் தன்னுடைய உணர்வுகளைப் புலப்படுத்தும் போது மேற்கூறிய இருவகைப்பாட்டிலும் பாடல்களைப் பாடியுள்ளார். தன்னைப் பற்றிப் பாடும் போது இரும்பு நெஞ்ச வஞ்சனேன் எனக் குறிப்பிடுகிறார். வலியது இரும்பு என்பது எல்லோரும் நன்கு அறிவர். இரும்பை இளகச்செய்ய வேண்டுமானால் நெருப்பில் இடவேண்டும். தன்னுடைய வஞ்சகங்கொண்ட நெஞ்சத்தைக்கண்டும் தன்னை இறைவன் வலிய வந்து ஆட்கொண்டபோது தான் பெற்ற அனுபவத்தை மீளவும் நினைந்து அவர் பாடுகிறார். இறைவனுடைய திருவடி அவருடைய தலையில் பதிந்த போது அவர் பெற்ற இன்பத்தை அந்த அற்புதமான உணர்வினைப் பிறருக்கு எடுத்துக்கூறும் போது ஓர் உவமையைப் பயன்படுத்துகிறார். தாள் கருப்பு மட்டு வாய் மடுத்து என்ற தொடர் இதனை நன்கு புலப்படுத்துகிறது.

இறைவனுடைய திருவடி இன்பமாகிய கருப்பஞ்சாற்றை உண்பித்து என அவர் கூறும் தெய்வீக அனுபவம் எல்லோரும் உணரக்கூடியதாக அமைந்துள்ளது. இனிமையை வாயினால் சுவைத்தறியலாம். கரும்பினுடைய இனிமையை எல்லோரும் சுவைத்து உணர்ந்துள்ளனர். கருப்பஞ்சாற்றைத் தனக்கு உண்பித்து இனிய உணர்வைப் பெறுவதுபோல இறைவன் திருவடி தீட்சை பெற்றபோது ஏற்பட்ட இனிய உணர்வு உடல் முழுவதும் பரவிநிற்பதை மணிவாசகர் உணர்கிறார். சுவை மூலம் இறை இன்பத்தை எல்லோரும் அனுபவிக்க வழிகாட்டியுள்ளார். அதுவும் மிகவும் இனிய உணவை ஒருவர் ஊட்டிவிடும்போது ஏற்படும் இன்பத்தை எல்லோரும் உணர்ந்திருப்பர். இந்த உலகியல்நிலையான இன்பத்தை, இறையின்பத்தை, தான் அனுபவித்த இன்பத்தைச் சிறந்ததொரு உவமையால் மிகத்தெளிவாக மணிவாசகர் எடுத்துள்ளார்.

ஆனால் அந்த இன்பத்தை அவர் இறைவன் பிரிவால் இழந்து விடுகிறார். தன் துன்பத்தைத் தாங்கமுடியாமல் நெருப்பிலே வீழ்ந்து உயிரைப் போக்காமல் மீண்டும் உலகியல் வாழ்க்கைக்குத் திரும்பியதை எண்ணி வேதனைப்படுகிறார். உலகியல் நிலையான, உணவுகளை உண்டு வாழ்ந்த அறியாமையை எண்ணி எண்ணி ஏங்குகிறார். இந்த நிலையில் இறைவனிடத்திலே தனக்கு விருப்பம் உண்டு என்று தான் சொல்வது அறியாமையே என்கிறார்.

### கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

விருப்பமான ஒன்றை யாருமே பிரிந்து செல்லவிரும்பமாட்டார்கள். வஞ்சமனத்தையும் இரும்பு மனத்தையும் கொண்டவர்களே பிரிந்து செல்வர். தான் இறைவனைச் சந்தித்த அனுபவத்தை மணிவாசகர் எனைக் கலந்து போக என்று சொல்கிறார். கலந்து என்ற சொல் இறைவன் பற்றிய எண்ணத்தோடு இருந்த பக்தி நிலையயைத் தெளிவாகச் சுட்டி நிற்கிறது.

இத்தகைய கலக்கும் நிலை எமது வழிபாட்டு நிலைக்கும் மேலாக ஒரு உயர்ந்த மனப்பக்குவ நிலையைக் காட்டுகிறது. அதை எல்லோரும் அடைந்து இறையின்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பதே அவர் பாடல்தரும் அறிவாகும்.

இரும்பு நெஞ்ச வஞ்சனேனை
ஆண்டு கொண்ட நின்னதாட்
கருப்பு மட்டு வாய் மடுத்து
எனைக் கலந்து போகவும்
நெருப்பும் உண்டு யானும்
உண்டிருந்த துண்டாயினும்
விருப்பம் உண்டு நின் கண்
என்ப தென்ன விச்சையே

# வோர்ண் முக்கியமானவர்- கிளார்க்



இங்கிலாந்தில் தற்போது இடம் பெற்றுக்கொண்டுள்ள ஒருநாள் அடுத்தாண்டு இடம்பெறவுள்ள ஆஷஷ் தொடர் ஆகியவற்றில் அவுஸ செயற்பட ஷேன் வோணின் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்வதாக தலைவர் மைக்கல் கிளார்க் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் சம்பந்தமான ஷேன் வோணின் அறிவு பரந்துபட்டது எனத் அவரிடம் அறிவுரை கேட்கக்கூடியதாகக்காணப்படுவது அதிர்ஷ்டகர தெரிவித்தார்.

ஷேன் வோணிடமிருந்து தான் ஏராளமானவற்றைக் கற்று வருவதாகத் தெரிவித்த மைக்கல் நுட்பரீதியாக வோர்ண் தவர்



சர்வதேசப் போட்டித் தொடர் மற்றும் திரேலிய அணி சிறப்பாகச் அவுஸ்திரேலிய அணியின்

தெரிவித்த அவர், மானது எனத்

கிளார்க், ஷேன் மிகச் சிறந் எனவும், இது வரை தான் சந்தித் தவர்களில் சிறந்த நுட்ப அறிவைக் கொண்டவர்களில் வோணும் முக்கிய ஷேன்

மானவர், எவரிலும் குறைந்தவரல்லர் எனவும் மைக்கல் கிளார்க் தெரிவித்தார்.

ஷேன் வோணோடு தனிப்பட்ட ரீதியில் நெருக்கமான நட்பைக் கொண்டவராக அறியப்படும் மைக்கல் கிளார்க், டெஸ்ட் போட்டிகள் சம்பந்தமாகவோ ஒருநாள் போட்டிகள் சம்பந்தமாகவோ தனக்கேதும் சந்தேகங்கள், பிரச்சி னைகள் ஏற்படும்போது ஷேன் வோணிடம் அறிவுரைகளைக் கோருவதாகத்

சர்வதேசப்

தெரிவித்தார்.

ஷேன் வோணின் நுட்ப அறிவுதவிர, இங்கிலாந்தின் பிராந்திய அணியான ஹம்ப்ஷயர் அணிக்குத் தலைமை தாங்கிய அனுபவம், இங்கிலாந்தில் விளையாடிய அனுபவம், தற்போது நேர்முக வர்ணனையாளராகக் கடமையாற்றும் அனுபவம் ஆகியவற்றால் இங்கிலாந்து பற்றிய அறிவு அவரிடம் காணப்படுவதாகத் தெரிவித்த மைக்கல் கிளார்க், ஆஷஷ் தொடர் அடுத்தாண்டு இடம்பெறவுள்ள நிலையில் அவரது கருத்துக்கள் முக்கியமானவை எனத் தெரிவித்தார்.




## மாகாண மட்ட விளையாட்டு விழா

(முல்லாவி)

வடமாகாணப் பாடசாலைகளில் கல்வி பயிலும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான மாகாணமட்ட விளையாட்டுவிழா எதிர்வரும் 21ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

வலய மட்டப்போட்டிகளில் தெரிவாகி வெற்றியீட்டிய விசேட தேவை யுடைய வீர, வீராங்கனைகளுக்கே இப்போட்டி நடைபெறவுள்ளது.

விசேட கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், விசேட கல்வி ஆசிரிய ஆலோசகர்கள், முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப் பாளர், முறைசாராக் கல்வி ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர் மேற்படி வீரர்களை மாகாணமட்ட விழாவிற்கு தயார்படுத்துவதுடன் போட்டி தினத்தன்று பங்குபற்றி ஒத்துழைப்பு வழங்குமாறு வடமாகாணக் கல்வித் திணைக்கள மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு முன்னர் அறிவிக் கப்படும் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு போட்டியாளர்களுடன் சமூகம் தருமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (3-15)


## யுவ்ராஜ் இந்திய அணிக்குத் திரும்ப வேண்டும்

இவ்வாண்டு செப்டெம்பர் மாதத்தில் இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக டுவெண்டி டுவெண்டி தொடருக்கான அணியில் இந்திய யுவராஜ் சிங் இடம்பெறவேண்டும் என எதிர்பார்ப்பதாக யின் பிரதம தேர்வாளர் க்ரிஷ் ஸ்ரீகாந்த் தெரிவித் ணமாக ஐக்கிய அமெரிக்காவில் சிகிச்சை பெற்று பயிற்சிகளில் ஈடுபட ஆரம்பித்துள்ள சகல தொடர்பாகவே பிரதம தேர்வாளர் தனது டுள்ளார்.யுவ்ராஜ் சிங் தற்போது பயிற் துள்ளதாகத் தெரிவித்த க்ரிஷ் ஸ்ரீகாந்த் விடயம் எனத் தெரிவித்தார். இந்திய ணத்தை வென்றுகொடுத்த வீரர் திரும்ப வேண்டும் எனத் தெரிவித்த வருகைக்காகக் காத்திருப்பதாகவும் திரும்பவேண்டும் எனவும் தெரி கிரிக்கெட் சபையின் டுவெ கான மாத



அணியின் சகலதுறை வீரர் இந்தியக் கிரிக்கெட் அணி துள்ளார்.புற்றுநோய் கார இந்தியா திரும்பிய பின்னர் துறை வீரரான யுவ்ராஜ் சிங் நம்பிக்கையை வெளியிட் சிகளில் ஈடுபட ஆரம்பித் அது மிகவும் சிறப்பான அணிக்காக உலகக் கிண் திரும்பவும் அணிக்குத் அவர், அவரது மீள் அவர் அணிக்குத் வித்தார்.சர்வதேசக் உலக டுவெண்டி ண்டி தொடருக் அணி இம் தெரிவு

இறுதியில் செய்யப்படும் எனத் தெரிவித்த அவர் இன்னமும் காலமிருப்பதாகவும் தெரிவித்தார்.இலங்கை- இந்தியத் தொடருக்கான இந்திய அணியைத் தெரிவு செய்த பின்னரே ஸ்ரீகாந்த் இவ்வாறு தெரிவித்தார்.கடந்த ஆண்டு உலகக் கிண்ணத்தை இந்திய அணி வெற்றிகொள்வதற்கு முக்கிய காரணியாக அமைந்த யுவ்ராஜ் சிங், அத்தொடரின் நாயகன் விருதையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.







முல்லைத்தீவு மாவட்டமட்ட பிரதேச செயலர் பிரிவிற்கான பெரு விளையாட்டுப்போட்டி கடந்த 28ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்ட இராணுவக்கட்டளைத் தளபதி உரையாற்றுவதனையும் வெற்றியீட்டிய கரைதுறைப்பற்று விளையாட்டு உத்தியோகத்தர் வெற்றிக்கிண்ணம் பெறுவதனையும் கரைதுறைப்பற்று வெற்றியீட்டிய பெண் கபடி அணியினரையும் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட வடமாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை கலந்து கொண்டதையும் படங்களில் காணலாம்.

# விம்பிள்டன் டென்னிஸ் அரையிறுதியில் முர்ரே-சோங்கா; ஜோகோவிச்-பெடரர்


கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடைபெற்றுவருகின்றது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த கால் இறுதி ஆட்டம் ஒன்றில் உலகின் 4-ம்நிலைவீரரான ஆண்டி முர்ரே (இங்கிலாந்து) - ஏழாம் நிலை வீரரான டேவிட் பெரர் (ஸ்பெயின்) மோதினார்கள்.

இதில் முர்ரே 6-7 (5-7), 7-6 (8-6), 6-4 7-6(7-4) என்ற செட் கணக்கில் கடும் போராட்டத்துக்கு பிறகு வெற்றி பெற்று அரை இறுதிக்கு தகுதி பெற்றார். அவர் தொடர்ந்து 4-வது முறையாக விம்பிள்டன் அரை இறுதியில் நுழைந்துள்ளார். ஆனால் இதுவரை முர்ரே இறுதிப் போட்டிக்குள் நுழையவில்லை.

முர்ரே இதுவரை எந்த கிராண்ட்ஸ்லாம் பட்டத்தையும் பெறவில்லை. 2008-ல் அமெரிக்க ஓபனிலும், 2010, 2011-ம் அவுஸ்திரேலிய ஓபனில் இறுதிப் போட்டியிலும் தோற்று இருந்தார்.

உள்ளூர் வீரரான முர்ரே அரை இறுதியில் 5-வது தரவரிசையில் இருக்கும் வில்பரைடு சோங்காவை (பிரான்ஸ்) எதிர்கொள்கிறார்.




சோங்கா தொடர்ந்து 2-வது முறையாக விம்பிள்டன் அரை இறுதிக்கு நுழைந்துள்ளார். இவரும் இதுவரை கிராண்ட்ஸ்லாம் பட்டம் பெற்றது இல்லை. 2008-ம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓபன் இறுதிப் போட்டியில் தோற்றார்.

மற்றொரு அரை இறுதியில் நடப்பு சம்பியனும், உலகின் முதல் நிலை வீரருமான ஜோகோவிச் (செர்பியா) - மூன்றாம் நிலை வீரரும், விம்பிள்டன் பட்டத்தை 6 முறை வென்றவருமான ரோஜர் பெடரர் மோதுகிறார்கள்.

**அரை இறுதியில் மோதும் வீராங்கனைகள்**

உலகின் 2-ம் நிலை வீராங்கனையான விக்டோரியா அசரென்கா (பெலாரஸ்) கால் இறுதியில் ஆஸ்திரியாவை சேர்ந்த தமிராவை எதிர்கொண்டார். இதில் அசரென்கா 6-3, 7-6 (7-4) என்ற நேர் செட் கணக்கில் வென்று அரை இறுதிக்கு தகுதி பெற்றார். தொடர்ந்து அவர் 2-வது முறையாக அரை இறுதிக்கு நுழைந்துள்ளார்.



அவுஸ்திரேலியா ஓபன் சம்பியனான அசரென்கா அரை இறுதியில் 6-ம் நிலை வீராங்கனையான செரீனா வில்லியம்சை (அமெரிக்கா) எதிர் கொள்கிறார். செரீனா வில்லியம்ஸ் விம்பிள்டன் பட்டத்தை 4 முறை (2002, 2003, 2009, 2010) கைபற்றியுள்ளார்.

இதேபோல 8-ம் நிலை வீராங்கனையான கெர்பரும் (ஜேர்மனி) அரை இறுதிக்கு தகுதி பெற்றார். அவர் கால்இறுதியில் 6-3, 6-7 (7-9), 7-5 என்ற செட் கணக்கில் சக நாட்டைச் சேர்ந்த லிசிபியை வீழ்த்தினார். 15-ம் நிலை வீராங்கனையான லிசிபி 4-வது சுற்றில் நம்பர் 1 வீராங்கனையான ஷரபோவாவை வீழ்த்தி இருந்தார். கெர்பர் முதல் முறையாக அரை இறுதியில் நுழைந்துள்ளார்.

மற்றொரு கால் இறுதியில் 3-ம் நிலை வீராங்கனையான ரண்ட்வான்ஸ்கா (போலந்து) 7-5, 4-6, 7-5 என்ற செட் கணக்கில் கிர்லென் கேவாவை (ரஷ்யா) வீழ்த்தினார். அவர் அரை இறுதியில் கெர்பரை சந்திக்கிறார்.

## ஆணைக்குழுவின்...

கொள்ளும் உரிமை, நீதி மன்றத்தின் சுயாதீனத்தன்மை, சுயாதீன ஆணைக்குழுக்களை உருவாக்குதல் போன்ற பரிந்துரைகள் குறித்து கூடுதல் கவனம் செலுத்துப்பட வேண்டும் என குறிப்பிடப் பட்டுள்ளது.

சுயாதீன பொதுச் சேவை ஆணைக்குழு, காவல்துறை ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, நீதிமன்ற சேவை ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் விசாரணை அணைக்குழு ஆகியவற்றை உருவாக்க வேண்டுமென தொழில்சார் நிறுவனப் பேரவை தெரிவித்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய முறையில் அமுல்படுத்துவதன் மூலம் வெளிநாடுகளினால் சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் விமர்சனங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என சுட்டிக்காட்டியுள்ளது. (ந-8-11)

## என் ஆட்சியை...

சுமார் இரண்டு மணி நேரம் இடம்பெற்ற இக் கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி மகிந்த மேலும் தெரிவித்தமை வருமாறு,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக் கட்சியை குலைத்து சின்னாபின்மாக்கி விடலாம் என்று எவரும் கற்பனையில் கூட நினைத்து விட வேண்டாம். ஆட்சிக்குள்ளிருந்து சகல சலுகைகளையும் பெற்றுக்கொண்டு அதே ஆட்சிக்கு எதிராக செயற்படுவோர் குறித்த தகவல்கள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

அரசில் அங்கம் வகித்துக் கொண்டே அரசுக்கு எதிராக அறிக்கை விடுவதையும், திட்டிப் பேசுவதையும் குறித்து நான் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. ஆனால் இவ்வாறெல்லாம் அரசுக்குள்ளிருந்து கொண்டு மேற்கொள்வதை அனுமதிக்க முடியாது.

எவரையும் நம்பி நான் ஆட்சியமைக்கவில்லை. எவர் அரசை விட்டு வெளியேற முனைந்தாலும் அது குறித்து நான் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. எனக்கு அது பிரச்சினையுமில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசை எவ்வாறு தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பது பற்றி எனக்கு நன்கு தெரியும்.

இந்த அரசுக்குள் இணையவருவோருக்கான கதவும் திறந்தே இருக்கிறது. அதேபோல் அரசை விட்டு வெளியேறிச் செல்ல விரும்புபவர்களுக்காகவும் கதவு திறந்திருக்கிறது. தாராளமாகச் செல்லலாம்.

இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மிக ஆவேசமாக கூறியுள்ளார். அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8-11)

## கால்கள் கிழிந்த...

அனைத்துக் கைதிகளையும் காலை நீட்டச் சொல்லி முழங்காலுக்கும் பாதத்திற்கும் இடையில் கடுமையாகத் தாக்கியதில் முழங்காலுக்கு கீழ் அனைவருக்கும் கட்டுப் போடப்பட்டுள்ளது. அனைவருக்கும் உடலில் உட்காயங்கள் இருப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதி ஒருவரின் முதுகில் வட்டமாக பெரிய காயம் ஒன்று உள்ளது.

இதற்குக் காரணம் பிஸ்ரலால் அவர் தாக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

அனைவரது உடுப்புக்களும் அநுராத புரத்தில் வைக்கப்பட்டுள்ளது.

மாற்று உடுப்புகள் இல்லை. இரத்தக் காயங்களுடன் மூன்று நாட்கள் மாற்று உடையின்றி விடப்பட்டனர்.

சந்தேகத்தின் பேரில் கைதான நிலையில் அடித்துக் கொல்லப்பட்ட வவுனியாவைச் சேர்ந்த நிமலரூபனின் கால்கள் நடுவால் கிழிக்கப்பட்டுள்ளது.

இறப்பதற்கு முதல்நாள் இரவு உடலின் கண்டல் காயங்களில் இருந்து நீர் வழிந்தோடியிருக்கிறது.

தான் இறக்கப்போவதாக இரவு முழுவதும் வேதனையால் துடித்துள்ளார்.

கால்களுக்கு இடையில் மரக்கட்டைகள் வைக்கப்பட்டு கால் கிழிக்கப்பட்டதால் இடுப்புப் பகுதி பலமான சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரத்தில் உள்ள மற்றுமொரு கைதியின் மண்டைப் பகுதி கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளதால் அவர் கோமா நிலைக்குச் சென்றுள்ளார்.

இவரின் உயிரைக் காப்பது மிகவும் கடினம் என்று அநுராதபுரத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராகம வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டுள்ள நால்வரில் ஒருவர் கோமா நிலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இந்தப் போராட்டத்தில் முன்னின்றவர்கள் என அரச பாதுகாப்புப் பிரிவினரால் அடையாளம் காணப்பட்ட மூவரே போகம்பர சிறைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் அங்கு அவர்கள் மிக கொடூர சித்திரவதைகளை எதிர்கொள்வதாகவும் சிறைச்சாலை அதிகார மட்டத்தில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கைதிகள் அனைவரது உடல்களிலும் செயின் மற்றும் சவுக்குப் போன்ற பார்களால் அடிக்கப்பட்ட தழும்புகள் இரத்தக் காயங்கள் காணப்படுகின்றன.

இந்நிலையில் இனித் தம்மை அநுராத புரத்திற்கு மாற்றவேண்டாம் என்றும் மகரவிலேயே செத்துவிடுகிறோம் எனவும் கைதிகள் பயப்பீதியுடன் தெரிவிக்கின்றனர். (ந-8)

## ஊடகங்களின்...

மகிழ்சி அளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்பு நோக்கத்திற்காக இராணுவத்தினரை அதிகளவில் நிலைநிறுத்துவது என்பது மிகவும் நிதானமாக எடுக்க வேண்டிய தீர்மானம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இராணுவத் தளபதியை விடவும் அரசியல்வாதிகள் இந்தத் தீர்மானம் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஏனெனில் அதிகளவு படையினரை நிலைநிறுத்துவதானால் சில நேரங்களில் எதிர் விளைவுகள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுகின்றது என கூறிய அவர்,

- குறிப்பாக நல்லிணக்கப் பணிகளுக்கு இராணுவத்தின் பிரசன்னம் தடையாக அமையக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையர்களாக இருப்பது தமிழர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையை திருப்திகரமான பாதுகாப்புக் கட்டமைப்பாகக் கருத முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைக் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு எனவும்,

இரண்டு தரப்பினரதும் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமாயின் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டிது அத்தியாவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-8-11)

## சரணடைந்த புலிகளை...

கூறியுள்ளதாக இச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் லங்காநியூஸ்வெப் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தலைமை தாங்கிய படைத்தரப்பின் 55வது மற்றும் 59வது படைப்பிரிவுகள் வெற்றிலைக்கேணி கடற்படைப் பக்கமாகவும், முல்லைத்தீவில் இருந்தும் படை நகர்வுகளை மேற்கொண்டிருந்தன.

இறுதிக் கட்டப் போரின் போது மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தலைமையிலான படைத்தரப்பின் 59வது படைப்பிரிவால் கைது செய்யப்பட்ட கடற்புலிகளின் தலைவர்களில் ஒருவரான சசிகுமார் என்பவரே வவுனியா சிறைச்சாலையில் கடந்தவாரம் இடம்பெற்ற சம்பவத்தின் போது முன்னிலை வகித்திருந்தார்.

இப் போரின் போது கைது செய்யப்படுகின்ற மற்றும் சரணடைகின்ற விடுதலைப் புலிகளின் போராளிகள் அனைவரையும் கொலை செய்துவிடுமாறு கோத்தபாய ராஜபக்ஷ படைத்தரப்பின் எல்லாத் தளபதிகளுக்கும் தனிப்பட்ட முறையில் உத்தரவிட்டிருந்தார்.

அம்பலவன்பொக்கணை மற்றும் நந்திக் கடல் பகுதியில் படை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மேஜர் ஜெனரல் கமால் குணரட்ண தலைமையிலான படைத்தரப்பின் 53வது படைப்பிரிவால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் சார்ள்ஸ் அன்ரனி படைப் பிரிவைச் சேர்ந்த 303 போராளிகள் கோத்தபாயவின் உத்தரவுக்கமைய படுகொலை செய்யப்பட்டனர்.

இறுதிக் கட்டப் போரின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைய முன்வந்த விடுதலைப் புலிகளின் தலைவர்களான நடேசன் மற்றும் புலித்தேவன் போன்றோரை படைத்தரப்பின் 58வது படைப்பிரிவுக்கு தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையிலான படைப்பிரிவினர் படுகொலை செய்திருந்தனர்.

ஆனால் படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ விடுத்த உத்தரவை மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தலைமையிலான படைப்பிரிவினர் பின்பற்றவில்லை.

மாறாக கைது செய்யப்பட்ட ஒவ்வொரு விடுதலைப் புலிகளின் போராளிகள் குறித்த விபரங்களை அவர் புகைப்படங்களுடன் பதிவு செய்து இராணுவப் பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தார் என லங்கா நியூஸ் வெப் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னி யுத்தத்தின் பின்னர் பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக பணியாற்றிய மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா மீது போர்க் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டதோடு இவருக்கு வழங்கப்பட்டுள்ள இராஜதந்திர விலக்குரிமையை நீக்குமாறு கோரி உலகத் தமிழர் பேரவையின் சார்பில் கடந்த மார்ச் மாதம் 30 ஆம் திகதி பிரித்தானிய நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில், அவர் நாடுதிரும்பியிருந்தார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போது பொதுமக்களை இலக்கு வைத்து திட்டமிட்ட வகையில் மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தலைமையிலான படைப் பிரிவினர் தாக்குதல்களை மேற்கொண்டதாக பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சியும் குற்றம் சுமத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8-11)

## இலங்கையர்...

மூவர் சுகவீனமடைந்திருந்தனர்.

ஒருவர் மாரடைப்பால் பாதிக்கப்பட்டிருந்தார். அவர்கள் மூவரும் உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தமது கடற்பரப்பில் அனர்த்தங்கள் ஏற்படும் போது அதனை ஒன்றிணைந்த வகையில் எதிர்கொள்வது என்று அவுஸ்ரேலியாவும் இந்தோனேசியாவும் நேற்றுமுன்தினம் இணங்கிக் கொண்ட நிலையிலேயே இந்த அகதிப் படகு மீட்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

படகு அனர்த்தத்துக்கான காரணம் தெரியவராதபோதும் கடல் கொந்தளிப்பே காரணமாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (ந-8-11)

## வேலை தேடும் இளைஞர் யுவதிகளுக்கான அரியதோர் வாய்ப்பு

மிகச் சிறப்பாகவும் சுதந்திரமாகவும் விறுவிறுப்பாகவும் பணியாற்ற விரும்பும் நீங்கள் உலகப் பிரபல்யம் வாய்ந்த DS- max நிறுவனத்தில் இணைந்து கொள்வதன் மூலம் உங்கள் எதிர்காலத்தை பிரகாசமாக்குங்கள்.

நீங்கள் சாதாரண கல்வித் தகைமை கொண்டவரா? அப்படியாயின் 18–30 வயதிற்குட்பட்ட ஆண்/பெண் ஆகிய நீங்கள் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள். ஆறு (6) மாத கால பயிற்சி வழங்கப்படும். தெரிவு செய்யப்படுவோருக்கு பயிற்சிக் காலத்திலும் ரூ. 10,000/–ற்கு கூடுதலான வருமானத்தை பெறவும் முடியும். பின்னர் 38,000/– சம்பளத்துடன் நிரந்தரமாக பணிபுரியலாம். எங்களுடன் இணைந்து கொள்வதற்கு உங்கள் சுயவிபரக் கோவை, சான்றிதழ்கள், 3 கலர் பாஸ்போட் அளவிலான புகைப்படங்கள் என்பவற்றுடன்

**அழைக்க வேண்டிய இலக்கம் : 077-2151014, 021-7212045**

**குறிப்பு:**– பயிற்சிக் காலத்தில் இருபாலாருக்கும் தங்குமிட வசதி இலவசமாக வழங்கப்படும். (8769)


## 15 ஆபிரிக்க நாடுகளுடன்...

மற்றும் கொடேடி ஜவரி ஆகிய நாடுகளுடன் இராஜதந்திர உறவுகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. 62 ஆபிரிக்க நாடுகளில் 54 நாடுகள் சுயாதீனமானவை எனத் தெரிவிக்கப்படுகின்றது. எகிப்து, கென்யா, தென் ஆபிரிக்கா மற்றும் லிபியா ஆகிய நாடுகளுடன் மட்டுமே இலங்கை இதுவரையில் இராஜதந்திர ரீதியான உறவுகளை பேணி வருகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக மேற்குலக நாடுகள் வாக்களித்ததனைத் தொடர்ந்து ஆபிரிக்க நாடுகளுடன் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள அரசாங்கம் முனைப்புக் காட்டி வருகின்றது. (ந–8–11)


## ஒரு மாத அழகுகலை பயிற்சிப் பட்டறை

சுயமாக நீங்களே உங்களுக்கான அழகினை பராமரிப்பதற்கான பயிற்சிப் பட்டறை. அத்துடன் பகுதி நேரமாக வீட்டில் இருந்தவாறே பணம் சம்பாதிப்பதற்கான அரிய வாய்ப்பு.

**மிகக்குறைந்த பயிற்சிக் கட்டணத்தில் அரிய சந்தர்ப்பம்**

**ஆரம்பம் :- 07.07.2012 சனி 2 மணி**

**E-CITY ஆனைப்பந்தி சந்தி, பருத்தித்துறை வீதி**

**தொடர்பு இலக்கம்: 0755535126** (8767)



## அனைவருக்கும் வேலைவாய்ப்பு

பகுதிநேர/முழுநேர

**மாதம் ஒரு லட்சம் (Rs. 100000/=) வரை**

**Data Entry, Form Filling, Facebook, Animation, Copy pasting, Print, Photoshop, C++, Java, ....300 வேலைகள் உள்ளடக்கம்.**

**International Master Debit Card, வேலை விளக்கம் 100% உத்தரவாதம்.**

உங்கள் சுயவிபரக்கோவையைப் பூர்த்தி செய்து (தொலைபேசி எண் தெளிவாகக் குறிப்பிடவும்) 19.07.2012 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

அனுப்பவேண்டிய முகவரி: S. Jegamohan, Director,
TP No: 077 3967334 ACS, Kopay Center Kopay.

(8749)


## நிமலரூபனின்...

பட்டுள்ளதாகவும்,

றாகம பொலிஸார் நீதிமன்றில் பெற்ற உத்தரவிற்கமைய நேற்று நள்ளிரவு நிமலரூபனின் சடலம் றாகம பொதுமயானத்தில் அடக்கம் செய்யப்படலாம் எனவும் இதன் பின்னர் பொலிஸாரின் கட்டுப்பாட்டிலுள்ள நிமலரூபனின் பெற்றோர் நேரடியாக வவுனியாவிற்கு கொண்டு செல்லப்படலாம் என வும் மனித உரிமை செயற்பாட்டாளரும், நாம் இலங்கையர் அமைப்பின் தலைவருமான உதுல்பிரேமரத்ன தெரிவிக்கின்றார். (ந–8–11)


## O/L, A/L தகுதியோடு நீங்களும் British Qualified Chartered Engineer / Quantity Surveyor

பட்டதாரி ஆவதற்கு APSS வழிவகுக்கின்றது.....

City & Guilds 2012/2013 பொறியியல் வகுப்புக்கள் @ APSS International

**ஜுலை 09,10,11 ஆம்** திகதிகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை அனுமதிகள் வழங்கப்படும். கல்விச்சான்றிதழ்களுடன் நேரில் வரவும்

**பெற்றோர்கள் / மாணவ, மாணவிகளின் கவனத்திற்கு**

பட்டப்படிப்புக்கு தகுதியில்லை எனக் கவலை வேண்டாம். DIPLOMA / ADVANCED DIPLOMA தராதரத்தை 1 வருட காலத்திலும் பட்டப்படிப்பு B.Eng(Hons) 1 வருட காலத்திலும் பயின்று நீங்களும் ஒரு CHARTERED ENGINEER ஆகலாம்'

- CIVIL ENGINEERING
- ELECTRICAL AND ELECTRONIC
- QUANTITY SURVEYING
- TELECOMMUNICATION SYSTEMS
- MECHANICAL ENGINEERING
- MOTOR VEHICLE ENGINEERING

**ஆரம்பம் ஜுலை 15, 2012**

- Diploma / Ad.Diploma சித்தியெய்தியதும் வேலை வாய்ப்பு கொடுக்கப்படும்.
- Diploma முடித்த ஒருவருக்கு ஊதியத்தோடு INDUSTRIAL TRAINING கொடுக்கப்படும்

இலவச ஆலோசனைகளுக்கு: Prof.K. சந்திரபோஸ் 077 3867695

அன்னவாசா, 242, Dr.சுப்பிரமணியம் வீதி, சுன்னாகம். தொ: 021 2241731

www.apsseducation.com

HOTLINE : 077 2306642 | 072 2306642 | 077 3867695

0112722990



## 02-07.2012 - 10.07.2012 வரை

## விஷேட விலைக் கழிவுடன்




## நாராயணா

கட்டடப் பொருட்கள் வர்த்தகர்

115, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 021 567 8157 021 222 5390



## மாபெரும் இலவச கண் சத்திர சிகிச்சை முகாம்

விழிவெண்படலத்தினால் பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கான கண்சத்திர சிகிச்சை லண்டன் மாநகரில் இருந்து வருகை தரும் கண்சத்திர சிகிச்சை நிபுணர்களினால் முற்றிலும் இலவசமாக யாழ்ப்பாணத்தில் நடைபெற உள்ளது.

இதற்கான பயனாளிகளை தெரிவு செய்யும் முகாம் Dr.S. குகதாசன் கண்சத்திரசிகிச்சை நிபுணர் அவர்களினால் மேற்கொள்ளப்பட உள்ளது. இதில் கலந்து கொண்டு பயன்அடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



இடம் – யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
காலம் – 08.07.2012– ஞாயிறு
நேரம் – காலை 8 மணி



**திருநெல்வேலி வட்ட லயன்ஸ் கழகம்**

With best Compliments From......!

**கஜமுகன் ஹாட்வெயர்**
**KAJAMUGAN HARDWARE**

கட்டடப்பொருட்கள், கம்பி வகைகள், சீமெந்து, pvcபைப் வகைகள், பெயின்ற் வகைகள், அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

147,149 Stanley Road, TEL :021-222 2833 147,149 ஸ்ரான்லி வீதி,
Jaffna FAX :021-222 2368 யாழ்ப்பாணம்

விளம்பர அனுசரணை

**E.S.P & Co**
52,54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(8760)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.